## பகுதி 1: வழிபாட்டு வழிகாட்டி


| | | |
|---|---|---|
| 02.07.2017 | ஆண்டின் 13ம் ஞாயிறு - திருப்பலி | 02 |
| 03.07.2017 | தூய தோமையார் திருவிழா - திருப்பலி | 02 |
| 06.07.2017 | தூய மரிய கொரற்றி - திருப்பலி | 03 |
| 09.07.2017 | ஆண்டின் 14ம் ஞாயிறு - திருப்பலி | 04 |
| 11.07.2017 | தூய பெனடிக்ட் - திருப்பலி | 05 |
| 15.07.2017 | அருளாளர் ஆன்மரி ஜாவுஹே - திருப்பலி | 06 |
| 15.07.2017 | தூய பொனெவெந்தூர் - திருப்பலி | 07 |
| 16.07.2017 | ஆண்டின் 15ம் ஞாயிறு - திருப்பலி | 09 |
| 18.07.2017 | தூய கமில்லஸ் தெ லெல்லிஸ் - திருப்பலி | 09 |
| 21.07.2017 | தூய லாரன்ஸ் - திருப்பலி | 11 |
| 22.07.2017 | புனித மகதலா மரியா திருவிழா - திருப்பலி | 10 |
| 23.07.2017 | ஆண்டின் 16ம் ஞாயிறு - திருப்பலி | 12 |
| 25.07.2017 | திருத்தூதர் யாக்கோபு திருவிழா - திருப்பலி | 13 |
| 26.07.2017 | தூய சுவக்கின் அன்னம்மாள் திருவிழா - திருப்பலி | 14 |
| 28.07.2017 | தூய அல்போன்சா திருவிழா - திருப்பலி | 15 |
| 30.07.2017 | ஆண்டின் 17ம் ஞாயிறு - திருப்பலி | 16 |
| 31.07.2017 | தூய இஞ்ஞாசியார் திருவிழா - திருப்பலி | 16 |


## பகுதி 2: விசுவாசத்தில் வளர...


1. புனித அல்போன்சா - இந்தியாவின் புனிதை 19
2. புனித இஞ்ஞாசியாரும் இயேசு சபையும் 22
3. குளுனி சபையின் வரலாறும் பணியும் 24
4. திருச்சபை செய்திகள் 25

# பகுதி 1: வழிபாட்டு வழிகாட்டி

02.07.2017 ஆண்டின் 13ம் ஞாயிறு திருப்பலி

திரு. இம்மானுவேல் ஜெயராஜ்

I. 2அர 4:8-11.14-16அ II. உரோ 6:3-4.8-11 நற்செய்தி: மத் 10: 37-42

## முன்னுரை

இன்றைய வாசகங்களும், நற்செய்தியும் நாம் இறைவனுக்காக எதை செய்தாலும் அதற்குரிய கைமாறு இப்பூவுலகில் மட்டுமல்லாமல் விண்ணுலகிலும் நிச்சயம் கிடைக்கும் என்பதை வலியுறுத்துகிறது. இறைவன் தன் பணியினை செய்யும் தன் ஊழியர்களுக்கும் உதவி செய்பவர்களுக்கும் நன்மைகள் செய்பவராக இருக்கின்றார். இறைவன், தனக்கு பணி செய்பவர்கள் தன்னை மட்டுமே முழுமையாக அன்பு செய்ய வேண்டுமென விரும்புகின்றார். தன் பெற்றோர், உடன் பிறந்தவர்கள், மனைவி, மக்கள், உறவினர் என்பதற்காகவும் தங்கள் சொந்த விருப்பு, வெறுப்பு, சுயநலத்திற்காக வாழ்பவர்கள் தன் சீடர்களாக இருக்க தகுதியற்றவர்கள் என்பதை ஆணித்தரமாக எடுத்துரைக்கின்றார். இத்திருப்பலியில் பங்குபெற வந்துள்ள நாம் நம் தேவைகளை குறித்தே செபிக்காமல் கத்தோலிக்க திருச்சபை உத்வேகம் பெறவும், சிதறுண்ட ஆடுகள் ஒன்றிணைக்கப்படவும், இறையரசு கட்டியெழுப்பப்படவும் இத்திருப்பலியில் பக்தியோடு செபிப்போம்.

## விசுவாசிகளின் மன்றாட்டு

1. கத்தோலிக்க திருச்சபையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள் அனைவரும் இறைவார்த்தைக்கிணங்க ஊழியம் செய்து இறையரசை கட்டியெழுப்பி மக்களை இறைவார்த்தையில் வழிநடத்தவும் தாங்கள் பெற்ற வரங்களால் மக்களின் துயர் நீக்கி நல்லதொரு உலகை படைக்கும் மேய்ப்பர்களாக திகழ்ந்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2. திருச்சபையில் பொதுநிலையினராகிய நாம் பொதுவானவர்கள் என்று வேடிக்கை பார்ப்பவர்களாக வாழாமல் இறைப்பணியில் நம்மை அர்ப்பணித்து திருக்குடும்பதைப் போலவும், அபிரகாம் சாராள் போலவும், அன்னாள் சுவக்கின் போலவும், சக்கரியாஸ் எலிசபெத் போலவும் நம் குடும்பங்களை இறைவனுக்கு ஒப்புக்கொடுத்து நாம் பெற்ற பிள்ளைகளை இறை ஊழியத்திற்கு காணிக்கையாக்க வரம் வேண்டி இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3. இளைஞர்களும்,இளம்பெண்களும்இறைத்திட்டம்ஏற்றுதிருச்சபையின் கட்டளைகளை கடைப்பிடித்து தங்கள் ஞானமேய்ப்பர்களுக்கு தங்களால் ஆன உதவிகளைச் செய்து நல்ல ஊழியர்களாகவும்

இறையாசீர் பெற்ற மக்களாகவும் வாழ உம் அருள்வேண்டி இறைவா உம்மை மன்றாடுகிறோம்

4. உலகிலுள்ள முதியவர்கள் தனிமையிலும், நோயிலும், வறுமையிலும் ஆதரவும், ஆறுதலும் பெறவும், அவர்கள் செய்த நன்மைகள், தியாகங்கள், சேவைகள் இவற்றிற்கெல்லாம் உதவும் நல்லுள்ளங்கள் பெருக இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

## 03.07.2016 புனித தோமையார் திருவிழா திருப்பலி

திரு. ஜீசஸ் மகுட மன்னன்

**முன்னுரை**

"என் ஆண்டவரே, என் தேவனே" (யோவான் 20: 19-29)

இறையேசுவில் இனியோரே, இன்று கிறிஸ்துவை நமது மீட்பராக ஏற்றுக்கொண்டு தினமும் திருப்பலியில் "என் ஆண்டவரே என் தேவனே" எனப் போற்றி புகழ காரண கர்த்தாவான தூய தோமையாரின் பெருவிழாவை, உலகத் திருச்சபைக் கொண்டாடிக் கொண்டிருக்கிறது. நமது இந்திய நாட்டின் பாதுகாவலரான தூய தோமையார் கலிலேயா நாட்டின் ஏழை மீனவக் குடும்பத்தைச் சேர்ந்தவர்.

கி.பி. 52ம் ஆண்டு இந்தியாவின் மலபார் நாட்டுக்கு கட்டிடக் கலைஞராக வந்தார். இயேசு ஆண்டவருக்கு ஏழு ஆலயங்கள் கட்டினார். அனாதைஏழைகளுக்குஇலவசமாகவீடுகள்கட்டித்தந்தார்.பிறகுசென்னை வந்தார். அப்போது ஊருக்குள் இருந்த ஒரு நதியின் முகத்துவாரத்தில் ஒரு மரத்துண்டு அடைத்துக்கொண்டு நதியில் வெள்ளம் வரும்போது அந்த வெள்ளத்தைத் தடுத்து ஊருக்குள் தண்ணீர் வரும் அபாயம் இருந்தது. இதைக்கண்ட அரசர், தோமையாரின் அற்புத ஆற்றலையறிந்து அவரை அழைத்துவந்து இதைச் சொன்னார். தோமையார் சிறிது நேரம் செபித்துவிட்டு, தாம் வைத்திருந்த மரியாவின் இடைக்கச்சையால் அந்த மரத்துண்டை தொட்டுவிட்டபின் இழுக்கச் சொன்னார். ஒரே வீரன் சாதாரணமாக இழுத்து வந்தான். தண்ணீர் உள்வாங்கியது. அரசர் மகிழ்ந்து அதே இடத்தில் ஆலயம் கட்ட நிலம் வழங்கினார். இனிமேல் ஊருக்குள் வெள்ளமே வரக்கூடாதென்று தோமையார் அதே மரத்தைக் கொண்டு கம்பம் ஒன்றை நட்டார். 2004ம் ஆண்டு டிசம்பர் மாதம் 26ம் தேதி சுனாமியில் மைலாப்பூர் எந்த பாதிப்பும் ஏற்படாமல் பாதுகாக்கப்பட்டது. (புனித தோமையார் கையேடு) புனித தோமையார் துணிச்சல் மிக்கவர், "நாமும் செல்வோம், அவரோடு இறப்போம்" (யோவா 11:16) எனத் துணிச்சலுடன் கூறியவர். எனவே நாமும் தூய தோமையாரைப்போல கிறிஸ்துவின் உண்மையான விசுவாசிகளாக வாழ்வோமென வாக்களித்து இன்றையத் திருப்பலியில் பங்கெடுப்போம்.

## விசுவாசிகளின் மன்றாட்டு

1. விசுவாசத்தின் ஊற்றே எம் இறைவா, இன்றைய சமாதானமற்ற உலகை சமாதானத்தில் வழிநடத்திச் செல்லும் எங்கள் திருத்தந்தை பிரான்சிஸ், கர்தினால், ஆயர், குருக்கள், கன்னியர், துறவறத்தார், பொதுநிலையினர் அனைவரும் விசுவாச ஒளியில் நற்செய்தியை அறிவிக்க தேவையான வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. உங்களுக்கு அமைதி உரித்தாகுக என மொழிந்த இறைவா, ஐயம் தவிர்த்து நம்பிக்கைக் கொள் என் விலாவில் உன் கையைவிடு எனத் தோமையாருக்கு ஐயம் தீர்த்தவரே, இவ்வுலக ஆசைகளில் மனதைச் செலுத்தி இறையருளை இழக்கும் மக்கள் அனைவரும் இயேசுவே நிம்மதியான வாழ்வு தருபவர் என உணர்ந்து வாழத் தேவையான வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

3. நீரே என் ஆண்டவர், நீரே என் கடவுள் என தூய தோமையார் வழியாக வெளிப்படுத்தியவரே, எம் பங்கிலுள்ள மக்கள் இயேசுவே வாழ்வும் வழியும் என உணர்ந்து, தடுமாற்றம் இல்லாத விசுவாசத்துடன் நீர் ஒருவரே கடவுள் என அறிக்கையிட்டு ஆராதிக்கவும் வணங்கவும் தேவையான வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 06.07.2017 புனித மரிய கொரற்றி திருப்பலி

திருமதி. பத்மாவதி

### முன்னுரை

இத்தாலி நாட்டில் கொரினால்டோ என்னும் கிராமத்தில் 1890ஆம் ஆண்டு அக்டோபர் 16ம் தேதி லூயிஜி மற்றும் அசுந்தா என்பவர்களுக்கு மகளாக மரிய கொரற்றி பிறந்தார். வறுமையின் காரணமாக உரோமுக்குச் சென்று அங்கு மாசெலெனி என்னும் பிரபுவின் தோட்டத்தில் வேலை செய்தார்கள். இரண்டு அறைகள் கொண்ட கோழி வளர்க்கும் வீடு காலியாக இருந்தது. அதில் அவர்களை தங்கிக் கொள்ளுமாறு மாசெலெனி கூறினார். 1900ஆம் ஆண்டு மே மாதம் கொடிய மலேரியாவால் மரிய கொரற்றியின் தந்தை இறந்தார். காலையும் மாலையும் செபிக்கும் பண்புள்ள மரிய கொரற்றி தந்தையின் ஆன்ம இளைப்பாற்றிக்காக தினமும் செபித்தார். பங்குத்தந்தை சொல்லும் மறையுரைகளை அப்படியே மற்றவர்களுக்கு விளக்கிக் கூறுவார். 13 வயதான மரிய கொரற்றி பல சிரமங்களுக்கிடையே முதல் நற்கருணை பெற்றார். மரிய கொரற்றி தன் வாழ்க்கையை முழுவதும் இயேசுவுக்காகவே வாழ்வது என்றும், தன் உடலை கிறிஸ்துவுக்காக தூ ய்மையான கற்பு நெறியுடன் பாதுகாப்பது என்று உறுதிக்கொண்டார்.

தீயவன் அலெக்சாண்டர் என்பவன் மரிய கொரற்றிமீது ஆசைக் கொண்டான். மரிய கொரற்றி இணங்காததால் யாரும் இல்லாத நேரத்தில் அவளை 14 முறை கத்தியால் உடல் முழுவதும் குத்தினான். காயமுற்ற மரியகொரற்றி மருத்துவமனையில் 1905ம் ஆண்டு ஜூலை 6ம் தேதி இறந்தார். இறைவன்மீது கொண்ட அளவிட முடியாத அன்பு அவரை புனிதராக மாற்றியது. மரிய கொரற்றிபோல் நாமும் இயேசுவை மனதில் வைத்து ஆழமான நம்பிக்கை விசுவாசம் கொண்டு வாழும் வரம் வேண்டி இத்திருப்பலியில் பக்தியுடன் பங்கேற்போம்.

### விசுவாசிகளின் மன்றாட்டு

1. சமாதானத்தின் இறைவா, உமது பிரதிநிதியான எம் திருத்தந்தை ஆயர்கள், குருக்கள், கன்னியர்கள், வேதியர்கள் அனைவரும் தூய மரிய கொரற்றியின் வழியில் தங்களின் கற்பு வாழ்வை வாழ அருள்பொழியுமாறு உம்மை மன்றாடுகிறோம்.
2. அமைதியின் இறைவா, எம் நாட்டுத் தலைவர்கள் பதவிமோகம், பண ஆசை கொள்ளாமல் நல்ல முறையில் ஆட்சி செய்து மக்களை சிறந்த வழியில் நடத்திட போதுமான ஞானத்தைக் கொடுக்கும்படி உம்மை மன்றாடுகிறோம்.
3. எம் பங்கின் பாதுகாவலரே இறைவா, எம் பங்கின் இளம் பிள்ளைகள் தங்களை முழுவதுமாய் இறை இயேசுவுக்கு அர்ப்பணித்து பிறரன்பு பணியில் தங்களை ஈடுப்படுத்தி பங்கின் பணிகளில் பங்குத் தந்தையோடு இணைந்து செயல்பட வேண்டிய ஆற்றலையும் வல்லமையையும் தந்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 09.07.2017 ஆண்டின் பொதுக்காலம் 14ம் ஞாயிறு திருப்பலி

திருமதி. டிலைலா சேவியர்

I. செக் 9: 9-10 II. உரோ 8: 9,11-13 நற்செய்தி. மத் 11: 25-30

### முன்னுரை

அன்புமிக்க சகோதர சகோதரிகளே, இன்றைய வாசகங்கள் இறைவனின் அளவற்ற அன்பையும், கனிவிரக்கத்தையும் தெளிவுப் படுத்துகிறது. பொதுவாக நாம் சந்திக்கும் சில சுமைகளை நாமே இறக்கி வைத்துவிடலாம். சில சுமைகளை மற்றவர்களின் உதவிகளோடு இறக்கிவிடலாம். ஆனால் சில பெருஞ்சுமைகளை கடவுளால் மட்டுமே இறக்கி வைக்கமுடியும். நம் இல்லத்திலும் உள்ளத்திலும் இருக்கும் பெரும் சுமைகளை இயேசு ஒருவரால் மட்டுமே இறக்கி வைக்க முடியும். இயேசு நம்மிடமுள்ள தாகமெனும் சுமைகளையும், (யோவான் 6:1-13) பசியென்னும் சுமையையும் (லூக்கா 11:19) நோயென்னும் சுமைகளையும் (லூக்கா 1-10) பாவமென்னும் சுமையையும் (லூக்கா 7:11-15) மரணமென்னும் சுமையையும் (திப. 2:1-13) பயமென்னும் சுமையையும் இறக்கி வைக்கின்றார். நாம்

நம்மை முழுவதுமாக இயேசுவின் பாதத்தில் கையளிக்கும்போது இயேசு நம்முடைய சுமைகளிலிருந்து முழுமையான விடுதலை தருகிறார். எனவே எல்லா சுமைகளையும், பாரங்களையும், கஷ்டங்களையும் இறக்கி வைக்க நமக்கு இயேசு இருக்கும்போது நாம் எதற்கு கலங்க வேண்டும் என்ற உண்மையை உணர்வோம். இறையருளைப் பெற இத்திருப்பலியில் நம்மை ஒப்புக்கொடுத்து செபிப்போம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

1. விழுகிற யாவற்றையும் தாங்கும் இறைவா, இன்றைய கால சூழலில் திருச்சபையையும், அதனை வழிநடத்திவரும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், கன்னியர்கள் ஆகியோர் தாங்கள் சந்திக்கும் அவலநிலைகள், கொடுமைகள், சித்திரவதைகள், தாக்குதல்கள் போன்றவைகளில் மனந்தளராமல் துறவற நிலையில் இறுதிவரை நிலைத்து நிற்கும் மனவுறுதியை தரவேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
2. சமாதானத்தின் ஊற்றே இறைவா, உலகமெங்கும் ஏற்பட்டிருக்கும் வர்க்கபேதம், இனவெறி, மதவெறி, தீவிரவாதம், சர்வாதிகாரம் போன்றவைகள் அழிந்து உமது அன்புக்குரிய பிள்ளைகள் என்கிற சமத்துவ உணர்வோடு எல்லோரும் வாழவும் ஒருவரையொருவர் ஏற்றுக்கொண்டு அன்போடும் பாசத்தோடும் வாழும் நல்லலுள்ளத்தை தர வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
3. சுமைகளை சுகமாக்கும் இறைவா, தீராத வியாதிகள், ஏமாற்றங்கள், கடன், தனிமை, வெளியே சொல்லமுடியாத வேதனைகள் எங்களை வருத்தும்போது "பெருஞ்சுமை சுமந்து சோர்ந்திருப்பவர்களே எல்லோரும் என்னிடம் வாருங்கள் நான் உங்களைத் தேற்றுவேன்" என்ற இயேசுவின் ஆறுதல் மொழியை நினைவில் கொண்டு உம்மையே சார்ந்து வாழும் வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்..

## 11.07.2017 புனித பெனடிக்ட் திருப்பலி

திருமதி. ராணிவில்சன்

**முன்னுரை**

இறைவார்த்தையே வாழ்வு. வாழ்வே இறைவார்த்தையென வாழ்ந்தவர்கள் சிலரே. இந்த வரிசையில் வாழ்ந்தவர் நம் புனிதர் பெனடிக்ட். வீணான சடங்குகள், வெளியடையாள வேடங்களின்றி சிறிய செயலானாலும் உண்மையாக இருக்க வேண்டும் என வாழ்ந்தவர்தான் இன்றைய புனிதர். புனித ஸ்கொலாஸ்திகாவின் சகோதரர் இவர். உயர்ந்த குலத்தில் தோன்றியதால் புகழ்பெற்ற உரோமைக்கு கல்வி கற்க பெற்றோரால் அனுப்பப்பட்டார். அங்கு இளைஞர் மத்தியிலிருந்த தீச்செயல்கள் இவரை பதை பதைக்கச் செய்து, உரோமையைவிட்டு

வெளியேறினார். இறைவனுக்கு தன்னை அர்ப்பணிக்க திட்டமிட்டு மலை உச்சிக்குச் சென்று எர்மானுசு என்ற தவமுனிவரை சந்தித்து அவர் காட்டிய வழியில் தவ வாழ்க்கை மேற்கொண்டு மக்கள் பலரை தன்பால் ஈர்த்தார். இதன் விளைவாக தோன்றியதே "பெனடிக்ட் துறவற சபை".

கி.பி. 1964ல் திருத்தந்தை 6ம் சின்னப்பர் இவரை ஐரோப்பிய நாடுகளின் சிறப்பு பாதுகாவலர் என அறிவித்தார். துறவு வாழ்வுப்பற்றி இவர் எழுதிய துறவற வாழ்வின் ஒழுங்கு நூல் உறுதுணையாக இருந்ததுபோல் வேறு எந்த நூலும் அந்நாளில் அமையவில்லை. அதனால் 12ம் பத்திநாதர் இவருக்கு ஐரோப்பாவின் தந்தை என்ற பட்டம் சூட்டினார். திருப்பலியில் திருவுணவு பெற்று செபிக்கும்போதே உயிர் பிரிந்தது. (புனிதர்களின் வராறு புத்தகம்)இவரது திருநாளை சிறப்பிக்கும் நாமும் இவரைப்போல தியாக வாழ்வு வாழ இத்திருப்பலியில் இணைந்து மன்றாடுவோம். 2தெச 7:7-12ல் சோம்பித்திரியாமல் பிறருக்கு சுமையாக இராமல், துன்பம் விளைவிக்காமல், உழைத்து உண்ணவும், பிறர் அதுபோல் வாழவும் அறிவுறுத்துகிறது இவ்வருள்வாக்கு. இன்றைய அருள் வாக்குகளும், நற்செய்தியும் நமக்கு சொல்வது இதுவே.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

1. தாயும் தந்தையுமான இறைவா, அனைத்திலும் ஞானத்தோடு நடந்து கொள்ளவும் கிறிஸ்துவோடு மாறாத நட்பும் எவராலும் பிரிக்க முடியாத அன்பும், கூட்டு வாழ்வும் வாழ அழைக்கப்பட்ட எம் ஞான மேய்ப்பர்களை ஆசிர்வதிக்க வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. வாழும் வழிகளை எமக்கு கற்பித்த இறைவா, திருஅவையின் உண்மையான கட்டளைகள் என்ன என்பதை உணர்ந்து அதை சிரமேற்கொண்டு வாழ்ந்து எமது வாழ்வில் பிறரையும் ஈர்த்து வாழ வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

3. புனிதமான இறைவா, இன்றைய விழா நாயகர் புனித பெனடிக்ட் போல துறவற வாழ்வு வாழ்பவர்களுக்கு இறைமக்களாகிய நாங்கள் குடும்பத்தோடு செபிக்கும் செபத்தில் அவர்களுக்காக மன்றாடவும், அவர்களின் தேவைகளை சந்திக்க பொருளுதவிகள் செய்யும் தாராள மனதைத் தந்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

4. கருணை வள்ளலே இறைவா, பள்ளிகள் திறந்திருக்கும் இந்நேரத்தில் பிள்ளைகளின் அநேக தேவைகளை பெற்றோர்கள் நிறைவேற்ற வேண்டிய பொறுப்பில் இருக்கின்றார்கள். இவர்களின் தேவைகளை சந்தித்து தேவையான பொருளாதார உதவிகள் கிடைக்க நீர் உதவிட வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 15.07.2017 அருளாளர் ஆன்மரி ஜாவுஹே திருப்பலி

திரு. ஜான் அலெக்ஸ்

### முன்னுரை

அன்புக்குரியவர்களே, நெப்போலியன் காலத்தில் பிரன்ச் புரட்சியின் உச்சத்தில் இருந்த நேரத்தில் வாழ்ந்த ஒரு அன்னை தெரசா யார் என்று பார்த்தால் அது அருளாளர் ஆன் மரி ஜாவுஹே என்பது நமக்கு தெரியவரும். அத்தகைய வாழ்வு வாழ்ந்தவரின் நினைவை இன்று நாம் கொண்டாடுகின்றோம். இந்த நாயகியின் மனதில் பிரன்ச் புரட்சி மிக ஆழமான அதிர்வை ஏற்படுத்தியதன் விளைவாக, அவர் குருக்களுக்கும் குருக்கள் திருப்பலி நிறைவேற்றுவதற்கும் மறைமுகமாக பல உதவிகளை செய்தார். அதுமட்டுமல்ல துறவு வாழ்வை மேற்கொண்டு, மனித நேய பணிகளில் ஈடுபட்டு இறை சித்தத்தால் அகதிகள், அடிமைகள் வாழ்வு பெற பணியாற்றினார்.

பலமுறை புனித அவிலா தெரசா அவருக்கு காட்சிதந்து சிறுவர்களை பாதுகாக்கும்படி அழைக்கப்பட்டார். சாதி, இன, மத வேறுபாடின்றி மக்களை காப்பதை தன் இலட்சியமாக கொண்டவர், பின்னாலில் குளுனியின் தூய வளனார் அருட்சகோதரிகள் சபையை நிறுவியவர். மக்களால் அன்புத்தாய் என்று அன்போடு அழைக்கப்பட்டவர். வசதியான குடும்பத்தில் பிறந்தவர் என்றாலும் தனது இலட்சிய வாழ்விற்காக பல சிலுவைபாடுகளை அனுபவித்தவர். தன்வாழ்நாள் முழுவதும் அடிமைப்பட்டவர்களின் விடுதலைக்காக பணியாற்றியவர், 1851 ஜுலை 15ம் நாள் மறைந்தாலும் இன்றும் உலகெங்கும் தன் சபையின் 3500 அருட்சகோதரிகளின் வழியாக வாழ்ந்துகொண்டிருக்கிறார் என்பதே உண்மை. இவரின் வாழ்வு மூலம் மனிதநேயம் செழிக்க நாம் பணியாற்ற இன்றைய திருவழிபாடு நம்மை அழைக்கின்றது அந்த அழைப்பை ஏற்போம். தொடர்ந்து இத்திருப்பலியில் பங்கேற்போம்.

### விசுவாசிகளின் மன்றாட்டு

1. நம்பிக்கையின் திருஉருவே இயேசுவே, திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவிகள் நம்பிக்கையற்றோருக்கு நம்பிக்கையாகவும், சோர்வுற்றோருக்குபலமாகவும், வழிதவறியோருக்கு நல்வழிகாட்டியாகவும் திகழ்ந்து உமக்காக வாழும் வரத்தை தந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2. இயேசுவே உமது வார்த்தையை உலகுக்கு எடுத்துரைக்க இறைவாக்கினரை ஏற்படுத்துகின்ற இறைவா, உம் வாக்கை அன்புடனும் தாழ்ச்சியுடனும் கேட்டுக் கீழ்படியும் மக்களாக நாங்கள் வாழ இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3. மாட்சிமிகு இயேசுவே, பகிர்ந்து வாழும் தாராள உள்ளத்தை எங்களுக்கு தந்து உமது தூய ஆவியினால் எங்களை நிரப்பியருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

4. அனைத்திலும் சிறந்தது அன்பே என்பதை அறியும் நாங்கள் உண்மையான அன்பின் மக்களாக வாழவும் ஏழை, எளிய, ஆதரவற்ற, கைவிடப்பட்டோர், இன்னலுறுவோருக்கு உமது அன்பை அளிக்கும் தாராள மனதை எங்களுக்கு தந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

## 15.07.2017 புனித பொனெவெந்தூர் திருப்பலி

திருமதி. ராணிசம்பந்தன்

### முன்னுரை

இறையன்பில் வாழும் இனிய நெஞ்சங்களே, இன்றைய தினம் நாம் புனித பொனெவெந்தூர் என்னும் புனிதரை நினைவு கூறுவோம். ஜான் என்பது இவரது திருமுழுக்குப் பெயர். இளம் வயதில் இவர் நோய்வாய் பட்டபொழுது புனித பிரான்சிஸ் அசிசியார் இவரை புதுமையாக சுகப்படுத்தினார். தூய பொனெவெந்தூர் தனது 22ம் வயதில் பிரான்சிஸ்கன் சபையில் சேர்ந்து புனித தாமஸ் அக்குவினாசை நண்பராக பெற்று கல்வி பயின்றார். பின்னர் சபையின் தலைவராகி சபையில் அமைதியை ஏற்படுத்தினார். புனித அசிசியாரின் வாழ்க்கை வரலாற்றை எழுதியபோது புனித தாமஸ் அக்குயினாஸ் "ஒரு புனிதர் மற்றொரு புனிதரின் வரலாற்றை எழுதிக் கொண்டிருக்கிறார்" என்று கூறி பெருமிதப்பட்டார். திருத்தந்தை இவரது திறமையை கண்டு இவரை கர்தினாலாக்க தீர்மானித்து அதற்குரிய தொப்பியை தனது பிரதிநிதிகள் மூலமாக புனித பொனெவெந்தூரிடம் அனுப்பினார். அவர்கள் அங்கு சென்றபோது சமையறையில் தட்டுகளை கழுவிக்கொண்டிருந்த புனித பொனெவெந்தூரை கண்டு திகைத்து விட்டனர். புனிதர் அவர்களிடம் "தொப்பியை தயவு செய்து அந்த மரத்தில் தொங்க விட்டு செல்லுங்கள்" என்று கூறினார் நமது தாழ்ச்சி நிறைந்த புனிதர். (புனிதர்களின் வரலாறு)தன்னையே இழக்க துணிந்தவன் உண்மையான சீடன். வாழ்வில் துன்பங்கள் நேரும்போது தளரா மனதுடன் இறைவனைப்பற்றிக் கொண்டு எதையும் தாங்கும் இதயத்துடன் வாழவேண்டும் என்றும், சீடத்துவம் என்பது எதையும் முழு நிறைவுடன் செய்வதுதான் என்று கூறும் நமது புனிதரின் நினைவுடன் திருப்பலியில் இணைவோம்.

### விசுவாசிகளின் மன்றாட்டு

1. நல்லாயனாம் இறைவா, உமது வழிதோன்றும் திருத்தந்தை, கர்தினால்கள், ஆயர்கள், இருபால் துறவியர், குருக்கள்,

பொதுநிலையினர் அனைவரையும் ஆசிர்வதித்தருளும். ஆவியின் கொடைகளை பெற்றுள்ள இவர்கள் வளரும் சமுதாயத்தினரை இறைவாக்கு பணியாளராக தொண்டாற்றும் உள்ளம் கொண்டவராக, கற்றுக்கொடுப்பவராக, ஊக்கமூட்டுபவராக, தலைமை பொறுப்பேற்று செயல்படும் தலைவராக உருவாக்க வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. பாதுகாப்பளிக்கும் இறைவா, உலகெங்கிலும் உள்ள கத்தோலிக்கர்களுக்கு மற்ற மதவாதிகளால் எந்தவித தீங்கும் உயிர் ஆபத்தும் ஏற்படாவண்ணம் பாதுகாத்து, மதநல்லிணக்கமும், ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்து அன்பை வளர்க்கவும், ஒற்றுமை உணர்வு அனைவர் மனதிலும் உருவாகவேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. இரக்கத்தின் அரசே, இக்கால இளைய சமுதாயத்தினரை உம்கரம் ஒப்புவிக்கிறோம். வங்கிகளில் கடன்வாங்கி படித்தும் வேலைவாய்ப்பு கிடைக்காமல் சோர்ந்து, வாழ வழித்தெரியாமல் தவித்துக்கொண்டிருக்கும் இளம் சமுதாயம் மீட்புப்பெற்று வாழவும், அவர் தங்களின் துன்பங்களை துடைக்க வழிகாட்டவும் வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.

## 16.07.2016 ஆண்டின் பொதுக்காலம் 15ம் ஞாயிறு திருப்பலி

திரு. விக்டர்

I. எசா 55: 10-11 II. உரோ 8: 18-23 நற்செய்தி. மத் 13: 1-23

### முன்னுரை

கடவுளின் வார்த்தை உயிருள்ளது. ஆற்றலுள்ளது. கடவுளின் வார்த்தை அவரது விருப்பத்தை நிறைவேற்றி முடிக்கும் திறன் உள்ளது. (எபி 4:12)இதைத்தான் ஆண்டவராகிய இயேசுவின் வாழ்வில் பார்க்கிறோம். "வார்த்தை" மனுவுருவாகி நம்மிடையே குடிகொண்டார். அவர் கடவுளின் விருப்பத்தை சிலுவையில் நிறைவேற்றி முடித்தார். நாமெல்லாரும் இழந்து போயிருந்த "கடவுளின் சாயலை" மறுபடியும் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பது கடவுளின் விருப்பம். அதற்காகத்தான் வார்த்தையாகிய இயேசு இவ்வுலகிற்கு அனுப்பப்பட்டார். அந்த வார்த்தையை நாம் எப்படி ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று இன்றைய நற்செய்தி நமக்கு விளக்குகின்றது. பிசாசிடம் இறை வார்த்தையை பறிகொடுக்கும் வழியோர நிலமாய் நாம் இருக்கின்றோமா? கவலை, பிரச்சனை, மனஅழுத்தம், குடும்பச் சூழ்நிலைகளால் நசுக்கப்படும் முட்புதராய் இருக்கின்றோமா? விசுவாசமில்லாத பாறை நிலமாக இருக்கின்றோமா? அல்லது 30, 60, 100மாக பலன் கொடுக்கும் நல்ல நிலமாக இருக்கின்றோமா? நம்மை நாமே ஆய்வு செய்வோம். கடவுளின் வார்த்தையை உள்வாங்கிக் கொண்டு அவற்றின்படி வாழ்ந்து 30, 60, 100மாக பலன் கொடுக்கும் நல்ல நிலங்களாக

மாற வரம்வேண்டி இத்திருப்பலியில் இணைந்து மன்றாடுவோம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

1. வார்த்தையாம் எம் அன்பு இறைவா, "கடவுளின் வார்த்தை உயிருள்ளது, ஆற்றல் வாய்ந்தது அது அழியாதது எதற்காக வந்ததோ அதை அது நிறைவேற்றும்" என்பதை விசுவசித்து எமது வாழ்வில் கடவுளின் வார்த்தைக்கு முக்கியத்துவம் தந்து அதை கடைபிடித்து வாழ வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
2. எம்மானுவேலே இறைவா, தூய ஆவி குடியிருக்கும் ஆலயமாக எம்மைத் தெரிந்துக்கொண்டீரே நீர் எம்மோடு தங்கியிருந்து உமது அன்பு, இரக்கம், பரிசுத்தம், சாந்தகுணம், மனத்தாழ்மை, பொறுமை, மன்னிப்பு ஆகிய பண்புகளால் எம்மை நிரப்பிட வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
3. வரமளிக்கும் வார்த்தையே இறைவா, உமது வார்த்தை செல்லும் இடமெல்லாம் ஆரோக்கியமும், அதை அறிவிக்கிறவர்கள் வாழ்வில் மகிழ்ச்சியும் செழிப்பும் உண்டாக வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 18.07.2017 புனித கமில்லஸ் தெ லெல்லிஸ் திருப்பலி

திருமதி. ராணிவில்சன்

**முன்னுரை**

இவரின் வாழ்க்கையை மேலோட்டமாக ஆராய்ந்தால் புனிதம் இவருக்கு நீண்ட தொலைவில் இருந்திருக்கும் குழந்தை பருவத்திலேயே பெற்றோரை இழந்த இவர் ஆதரவற்ற நிலையில் சூதாட்டத்திற்கு அடிமையானார். தனது 17வயதில் துருக்கியரை முறியடிக்க வெனிசு நகரிலிருந்த படைப்பிரிவில் சேர்ந்தார். அங்கு இவரது காலில் ஏற்பட்ட புண் ஆறாமலே நீடித்தது. உரோமையில் ஒரு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு பின் இவர் சூதாட்டத்திற்கு அடிமை எனக்கண்டு வெளியேற்றினர். 24வயதில் அவர் தாம் அணிந்திருந்த சட்டையைக்கூட வைத்து சூதாடி தோற்றுவிட்டார்.

இந்த நிலையில் கப்புச்சின் சபையொன்று இவரை ஏற்றுக் கொண்டது. அங்கே கேட்ட மறையுரை இவரை முற்றிலும் மாற்றிப்போட்டது. புது மனிதனாக்கியது. ஆனால் இவரது ஆறாப்புண்ணால் வெளியேற்றப் பட்டார். இவர் 34வயதில் தேவ அழைத்தலை உணர்ந்தார். இதில் இவருக்கு உறுதுணையாக இருந்தவர் புனித பிலிப்பு நேரி. அருட்பணி பட்டத்திற்குப்பின் இவர் ஒரு துறவற சபையை நிறுவி அதன் உறுப்பினர்களுடன் சிறைக் கூடங்களுக்குச் சென்று தம்மையே தியாகம் செய்தார். நேம்பிற்கு துறைமுகத்தில் வந்த ஒரு சிறு கப்பலில் தொற்றுநோய்

பாதிப்புக்குள்ளானோர் இருந்தனர். இவர்களை பராமரிக்கும் போது இவரது இரண்டு துறவிகள் இறந்தனர். இந்த இருவரும் இச்சபையில் அன்பின் மறைசாட்சிகளாய் பின்னர் அறிவிக்கப்பட்டனர். தந்தை கமில்லஸ் தனது முதிர்ந்த வயதிலும் கூட தனது கால்களை இழுத்து இழுத்து ஒவ்வொரு நோயாளிகளின் படுக்கைக்கும் சென்று அவர்களுக்கு எக்குறையுமின்றி பார்த்துக் கொண்டார். 64 வயதில் இவர் இறக்கும்போது 330பேர் இந்த சபையில் இருந்தனர். ஏற்கனவே தொற்றுநோயினால் 170 பேர் இறந்து விட்டனர். தூய கமில்லஸின் வாழ்க்கையை முன்னிறுத்தி நமது வாழ்வை மாற்றி தூய வாழ்வு வாழ இறையருள்வேண்டி இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

## விசுவாசிகளின் மன்றாட்டு

1. தாயும் தந்தையுமான இறைவா, இம்மண்ணில் உடல் புண்களைவிட மனப்புண்களோடு வாழ்ந்து வருகின்றவர்கள் ஏராளம். சாதி, சமய, மொழி, இனம் வேறுபாடில்லாமல், எங்கள் திரு அவையில் அருள்பணி ஏற்றிருக்கும் எங்கள் பணியாளர்கள் அனைவரும் தியாக திருவுருவாக, தம்மை இழந்து பிறரின் உடல், மனப்புண்கள் ஆற்றி புதுவாழ்வு தர அவர்களை ஆசீர்வதிக்க வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.
2. இரக்கமே உருவான இறைவா, எங்கள் குடும்பங்களில், பங்கில் பல்வேறு விதமான உடல் உள்ள காயங்களோடு இருக்கும் உள்ளங்களைத் தேடிச் சென்று அவர்களுக்கு ஆறுதல் கூறி பணிபுரிய எங்களை ஆசீர்வதித்து வழிநடத்திட வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.
3. தூயவரான இறைவா, நாங்கள் எந்நிலையில் இருந்தாலும் அன்பு செய்து ஏற்றுக் கொள்பவர் நீர் என்பதை இன்றைய புனிதர் வழியாக எண்பித்திருக்கிறீர். அதேப்போல இறைமக்களாகிய எங்களையும் ஏற்று உம் புனித பயணத்தில் பங்கேற்கும் அருளைத்தர வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.

## 21.07.2017 பிரிந்தீசி தூய லாரன்ஸ் திருப்பலி — திருப்பலி

திருமதி. ராணிசம்பந்தன்

### முன்னுரை

இறையேசுவில் வாழும் இனியோரே, இன்றைய புனிதர் பிரண்டிசி நகரில் பிறந்ததால் பிரண்டிசி நகர் புனித லாரன்ஸ் என்று அழைக்கப்படுகிறார். இளம் வயதிலேயே பிரசங்கங்களை சரளமாகவும் அழகாகவும் சொல்ல கூடியவர். அதனாலேயே மக்கள் அவரை "சிறிய சம்மனசு" என்று அழைத்தார்கள். 16ம் வயதிலேயே குருவாகும் பேறு அவருக்கு கிடைத்ததும் தாய் தடுத்தாலும் அழுதாலும் தாயை தேற்றி,

கடவுளின் அழைப்புக்கு கீழ்ப்படிய வேண்டும் என்று கூறி குருவானார். கப்புச்சின் சபை குருவாக அநேக மொழிகள் கற்று யூதர்கள் முதல் கொண்டு அநேகரை மனந்திருப்பினார். 1601ல் முகமதியர் ஐரோப்பாமீது போர் தொடுத்தபோது நான்கு மடங்கு அதிகமான எதிரி படையினர் வந்தபோது கிறிஸ்தவ போர்வீரர்களை உற்சாகப்படுத்தி சேனைகளின் ஆண்டவராகிய கடவுள்மீது நம்பிக்கை வைக்கும்படி பிரசங்கித்து அக்டோபர் 16ல் தானே கையில் சிலுவையை ஏந்தியவராய் குதிரைமீது ஏறி வீரர்களின் முன்னால் சென்றார். அற்புத விதமாக வெற்றி கிடைத்தது. பதின்மூன்றாயிரம் எதிரி வீரர்கள் உயிரிழந்து மீதிபேர் ஓட்டம் பிடித்தனர். மேலும் லூத்தர் திருச்சபைக்கு கொடுத்த துன்பங்களை வீரத்துடன் எதிர்த்து போராடியவர்களில் இவரும் ஒருவர். நமது புனிதரின் செயல்பாடான, கடவுளுக்கு கீழ்ப்படிவது அதிமுக்கியமானது என்ற கருத்தை ஏற்று, கடவுளுக்கு சேவை செய்ய விரும்பும் பிள்ளைகளை பெற்றோராகிய நாம் தடுக்காமல் இறை ஞானத்தில் வளர்ப்போம் என்ற சிந்தனையுடன் இத்திருப்பலியில் இணைவோம்.

### விசுவாசிகளின் மன்றாட்டு

1. திருச்சபையின் அரசரே எம் இறைவா, திருச்சபையை வழிநடத்தும் திருத்தந்தை, கர்தினால்கள், ஆயர்கள், குருக்கள், இருபால் துறவியர் மற்றும் பொதுநிலையினர் அனைவரும் உம் திருவருள் பெற்று ஞானத்துடன் செயல்படவும் திருச்சபைக்கும் அதன் வழி தோன்றல்களுக்கும் ஏற்படும் தீங்குகளுக்கும் உயிர் ஆபத்துகளுக்கும் பயந்து சோர்ந்து விடாமல் உம் நற்செய்தி பணியை செய்ய அருள்புரியும்படி உம்மை மன்றாடுகிறோம்.

2. நற்செய்தியின் நாயகனே எம் இறைவா, எம் இளையோர் புனித லாரன்ஸின் இளமைப்பருவ மனநிலையை மனதில்கொண்டு தேவ அழைத்தலுக்கு செவிமடுக்கும் பண்பையும், இறைவனின் செயல்களுக்கு கீழ்ப்படியும் பண்பையும் வளர்த்துக்கொள்ள அருள்புரிய வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. அன்பு தந்தையே இறைவா, திருமண உறவுகள் பிளவுபட்டு துன்புற்று வாழும் குடும்பங்களும், குழந்தைகளும் ஆசீர்வதிக்கப்படவும், குடும்பத்தில் ஒற்றுமை, அன்பு, பாசம், விட்டுக்கொடுத்தல், என்ற பண்புகள் தழைத்தோங்க வேண்டியும் உம்மை மன்றாடுகிறோம்.

## 22.07.2017 புனித மகதலா மரியா திருப்பலி

திரு. ஜான் அலெக்ஸ்

### முன்னுரை

"அன்பும் பாசமும் நிறைந்த உள்ளத்துடன் வாழும்போது
இறைவன் நமக்கும் காட்சிதந்து அருள் தருவார்"

அன்புக்குரியவர்களே, இன்று நாம் புனித மதலேன் மரியா அவர்களின் திருவிழாவை கொண்டாடுகின்றோம். இவர்தான் இயேசுவோடு மிக நெருக்கமான அன்புறவு கொண்டிருந்தவர் என்பதற்கு நற்செய்தி நூல்கள் பல சான்றுகள் வழங்குகின்றன. குறிப்பாக இயேசுவின் இறப்பின் வேளையில் அவரது ஆண் சீடர்கள் ஓடிவிட, சிலுவையடியில் நின்றுகொண்டிருந்த துணிவுமிக்க பெண்களில் இவரும் ஒருவர். இயேசுவை கல்லறையில் வைத்தபிறகு கூட, விடியற்காலையில் இருள்நீங்கும் முன்பே இயேசுவின் கல்லறைக்கு சென்றார் என்று நாம் விவிலியத்தில் வாசிக்கும் போது வியப்படைகிறோம். ஆம் அன்பில் அச்சமில்லை (1 யோ 4:18), அன்பிற்கு முடிவிராது (1கொரி 13:10) என்பதுபோல அன்புக்கு இலக்கணமும் அடையாளமுமாக விளங்குபவர் மதலேன் மரியா. இறந்த பின்பும் அன்பு வாழும் என்பதை எண்பித்தவர் மதலேன் மரியா. இயேசுவின் உயிர்ப்புக்கு மதலேன் மரியாவை ஒரு முக்கிய சாட்சியாக நாம் விவிலியத்தில் பார்க்கின்றோம். ஆகவே இப்புனிதரைப் போல ஒருவர் மற்றவரோடு அன்புறவுடன் வாழ தொடர்ந்து இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

1. தூய்மையின் திருஉருவே இயேசுவே, உமது திருச்சபையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் அனைவருக்காகவும் மன்றாடுகிறோம். தூய மகதலா மரியா இயேசுவின் உயிர்ப்புக்கு சான்று பகர்ந்ததுபோல் இவர்களும் உலகமக்களுக்கு உயிர்த்த இயேசுவுக்கு சான்று பகர்ந்து வாழ வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. அனாதைகளின் ஆதரவே இறைவா, மகதலா மரியா தனது வாழ்வில் இயேசுவை தேர்ந்துக்கொண்ட பிறகு அவருக்கு தன் வாழ்வையே அர்ப்பணித்து பணிவிடை புரிந்ததாரே, எங்கள் குடும்பங்களிலும் தாய்மார்கள் அனைவருக்கும் உதவிபுரிகின்ற நல்ல மனதினைத்தந்தருள வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.

3. குணமளிக்கும் ஆண்டவரே, இன்று திருவிழா கொண்டாடும் மகதலா மரியா ஒரு பெண்ணாக இருந்தாலும் ஆண்டவரின் உடலை தூய்மை படுத்த துணிவோடு விடியற்காலையில் கல்லறைக்குச் சென்று நமக்கு துணிவு என்றும் பாடத்தை கற்றுக்கொடுத்தார். நாங்களும் அதிகாலை சீர்கேடுகளை தட்டிக்கேட்கும் துணிச்சலை தந்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

4. இறை இரக்கத்தின் முகமான இயேசுவே, எங்கள் இயலாமையிலும் எங்களுக்காக தந்தையிடம் பரிந்து பேசுபவரே, உலகில் வாழும் எல்லா குடும்பங்களுக்காகவும் உம்மிடம் மன்றாடுகிறோம். ஒவ்வொரு குடும்பமும் உமது இரக்கத்தின் நிழலில் வளர்வதை உணர்ந்து பிறருக்கு

முன்மாதிரியாயும், வாழும் இடத்தில் சூழ்ந்துள்ளவர்களோடு உமது அன்பை வெளிப்படுத்தும் கருவியாய் வாழ இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

## 23.07.2017 ஆண்டின் பொதுக்காலம் 16ம் ஞாயிறு திருப்பலி

திரு. D.V.R. ராஜா

I. சா.ஞா. 12: 13,16-19 II. உரோ 8: 26-27 நற்செய்தி. மத் 13: 24-43

### முன்னுரை

ஆண்டவரே நம் கடவுள் அவரைத் தவிர வேறு தெய்வம் இல்லையென்று அன்றும் இன்றும் நம் ஆண்டவர் வெளிப்படுத்திக்கொண்டே இருக்கிறார். மனிதன் அனைத்தையும் மறந்து மனம்போன போக்கிலே வாழ்ந்து அணையா நெருப்பில் அகப்படக் கூடாது, அவன் பலவீனமாய் இருந்தாலும், சொல்லொண்ணா பெருமூச்சுடனே தூய ஆவியானவர் வேண்டுதல் செய்கிறார். இயேசு ஒவ்வொரு முறை பேசியபோதும் இவ்வுண்மைகளை எல்லா மக்களும் புரிந்துக்கொள்ளும் வண்ணம் உவமைகளால் பேசினார்.

இன்றைய வாசக நற்செய்தியிலுங்கூட கோதுமை விதை, புளித்தமாவு, கடுகு விதை, பதர்கள் ஆகிய உவமைகளைக் கொண்டு அணையா அக்கினிக்கு அகப்படாமல் ஆண்டவரோடு அனைவரும் வாசம் செய்யவே விரும்புகிறார். இந்த உலகமாகிய வயலில் நாம் நல்ல கோதுமை மணிகளை விளைவிக்கின்ற கதிர்களாக வளர்ந்துக் கொண்டிருக்கிறோமா? அல்லது தீமைகளை விளைவிக்கின்ற களைகளாக இருக்கின்றோமா? என்பதை சிந்தித்து சொல்லொண்ணா பெருமூச்கோடு நமக்காக செபிக்கின்ற தூய ஆவியானவரிடம் நன்மைகளை தருகின்ற நற் கதிர்களாக வளர்வதற்கான அருள்வேண்டி இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

### விசுவாசிகளின் மன்றாட்டு

1. **திருச்சபைக்காக:** மகிமையின் மன்னரே எம் இறைவா, எமது திருச்சபையை வழிநடத்தும் தலைவர் இறையரசைக் கட்டியெழுப்ப உலக மக்களை இறைவனிடம் அழைத்துச் செல்லும் உயரியப் பணியை செவ்வனே இடைவிடாது செய்யவும், உலக மாந்தர் அமைதியில் வாழ போர் பதற்றமின்றி நாடுகளுக்கிடையே நல்லுறவு ஏற்படுத்தும் அமைதியின் தூதுவராக விளங்கிட அருள்புரியுமாறு உம்மை மன்றாடுகிறோம்.

2. **இறைமக்களுக்காக:** இரக்கத்தின் ஊற்றே எம் இறைவா, இறைமக்கள் அனைவரும் விசுவாசத்தில் உறுதியாய் நிலைத்து எத்துனை துன்பங்கள் வந்தாலும் அவற்றிலிருந்து விடுவிக்க ஆற்றல் வாய்ந்தவர் இறைவன் என்பதை உணர்ந்து வாழவும் இறைவனுக்கு எல்லாவற்றிலும்

முதலானதை சமர்ப்பித்து மேலானவற்றைத் தக்கவைத்துக்கொள்ளவும் கையிட்டுச் செய்கின்ற காரியங்கள் வெற்றியடையவும் வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. **ஆட்சியாளர்களுக்காக:** நீதியின் அரசரே எமது தேசத்தையாளும்

## 25.07.2017 திருத்தூதர் யாக்கோபு திருவிழா திருப்பலி

தேவைகளை புரிந்து கொண்டு நல்லாட்சி நடத்தி மக்கள் இன்புற்று வாழ வரம்தர இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

திரு. ஜான் சுரேஷ்

**முன்னுரை**

இறை சமூகமே இன்று அன்னையாம் திருச்சபை இயேசுவின் சீடர்களில் ஒருவரான தூய யாக்கோபுவின் நினைவை கொண்டாடுகிறது. செபதேயுவின் மக்கள் யாக்கோபும், யோவானும் இயேசு அரியணையில் அமரும்போது அவருக்கு வலப்புறம் ஒருவரும் இடப்புறம் மற்றவரும் அமர தங்களுக்கு இரங்கும் என்று வேண்டினர். இவர்கள் இயேசுவின் சீடர்களாகவும், சகோதரர்களாகவும் வாழ்ந்ததாக மரபு கூறுகின்றது. யாக்கோபு எருசலேம் திருச்சபையின் தலைவராக இருந்தவர். புனித பவுல் புனித யாக்கோபுவை திருச்சபையின் தூண் என்று குறிப்பிடுகிறார். இவரின் திருமுகம் ஐந்தே அதிகாரம் கொண்ட சிறிய திருமுகமாயினும் சோதனைகள், ஏழைகள், நம்பிக்கை நற்செயல்கள், நாவடக்கம், மெய்ஞானம், உலகத்தோடு நட்பு பிறரை குற்றப்படுத்துதல், செல்வம் போன்ற தலைப்புகளில் அரும்பெரும் கருத்துக்களை எடுத்துக்கூறி நம்மை இயேசுவின் மதிப்பீடுகளின்படி வாழ அழைக்கின்றார். அவரை நினைவுகூறும் இந்நாளில் நாமும் அவரைப்போல் இறைவார்த்தையை வாழ்வாக்க இத்திருப்பலியில் பக்தியுடன் செபித்து பங்கு பெறுவோம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

1. திருச்சபையின் தலைவராகிய இயேசுவே, திருச்சபையில் பணியாற்றும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், கன்னியர்கள், துறவறத்தார் அனைவரும் உமது மக்களை உமது திருவுளத்தின்படி நேரிய வழியில் நடத்திட இறைவா அருள்புரியும்படி தூய யாக்கோபு வழியாக உம்மை மன்றாடுகிறோம்.

2. அன்பு இறைவா, குடும்பத்தில் உள்ள அனைவரும் எந்த பிரதிபலனும் எதிர்பார்க்காமல் ஒருவருக்கொருவர் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்போடும் பாசத்தோடும் அணுகி உபசரித்து உதவி செய்து வாழ வரம்தர வேண்டி தூய யாக்கோபு வழியாக உம்மை மன்றாடுகிறோம்.

3. ஞானத்தின் இருப்பிடமே எம் இறைவா, கல்வி பயிலும் அனைத்து மாணவ மாணவிகளையும் உம்பாதம் சமர்ப்பிக்கின்றோம்.

இவர்களுக்கு நல்ல கல்வி ஞானத்தை வழங்கி சமுதாயத்திற்கும் திருச்சபைக்கும் ஏற்ற பிள்ளைகளாக இவர்கள் வளர வேண்டுமென்று தூய யாக்கோபு வழியாக உம்மை மன்றாடுகிறோம்.

4. வல்லமையாய் சுகமளிக்கும் இறைவா, பலவிதமான நோய்கள், தீராத வியாதிகள், தொற்றுநோய்கள் போன்றவைகளால் மனம் தளர்ந்து வேதனையில் வாழும் மக்களை உமது வல்லமையால் குணப்படுத்தவும் இவர்கள்மீது உமது பேரிரக்கத்தை அருளும்படியும் தூய யாக்கோபு வழியாக உம்மை மன்றாடுகிறோம்.

## 26.07.2017 புனித சுவக்கின் அன்னம்மாள் திருவிழா திருப்பலி

திரு. விக்டர்

**முன்னுரை**

அன்பார்ந்தவர்களே, இன்று நாம் புனித சுவக்கின் அன்னம்மாள் தம்பதியரின் திருவிழாவைச் சிறப்பிக்கின்றோம். புனித அன்னம்மாள் அவர்கள் யூதேயாவில் உள்ள பெத்லகேம் என்னும் சிற்றூரில் பிறந்தவர். புனித சுவக்கினுடன் திருமணம் முடிந்த பிறகு இருவரும் நாசரேத்து நகரில் வாழ்ந்து வந்தனர். கடவுள் பக்தியிலும், தாம்பத்திய ஒழுக்கத்திலும், தெய்வ பயத்திலும் சிறந்து விளங்கினர். கடவுளின் பரிசுத்த வேதாகமத்தை கற்றுவைத்திருந்தது மட்டுமல்லாமல் கடவுளுக்குப் பிரியமானவர்களாகவும் வாழ்ந்து வந்தனர். ஆனால் இத்தம்பதியருக்கு குழந்தைப் பாக்கியம் இல்லை.

திருமணமாகி பல ஆண்டுகள் குழந்தை பிறப்பு இல்லாதிருந்தது பல ஆண்டுகளுக்கு பிறகு கடவுளின் வானதூதர் இருவருக்கும் தோன்றி "ஒரு அழகிய குழந்தையைப் பெறுவீர்கள் என்று தனித்தனியாக வாக்களிக்கின்றார். வானதூதர் வாக்களித்தவாறு ஒரு அழகிய பெண்குழந்தை பிறக்கிறது. அதற்கு மரியாள் என்று பெயரிடுகின்றனர். குழந்தைக்கு மூன்று வயது நிரம்பியவுடனேயே அக்குழந்தையை தாம் நேர்ந்துக்கொண்டபடி ஆலயத்தில் காணிக்கையாக வழங்குகின்றனர்.

மரியாள் பிறந்த சில ஆண்டுகளிலேயே சுவக்கின் மரித்துவிடுகின்றார். அன்னாளோ தமது 48வது வயதில் மரிக்கின்றார். "அருள்மிகப் பெற்றவளே வாழ்க" என்று கடவுள் வாழ்த்தும் அளவுக்கு அன்னை மரியாளை உருவாக்கியவர்கள் இவர்கள். திருவிவிலியத்தில் இவர்கள் பற்றிய குறிப்புகள் இல்லாவிட்டாலும் புனித யாக்கோபு எழுதியுள்ள நற்செய்தியில் இக்குறிப்புகள் இடம் பெற்றுள்ளன. ஆனால் இந்நூல் திருவிவிலியத்தில் இணைக்கப்படவில்லை. தாய் திருச்சபை இவர்களது வாழ்வைப் பாராட்டி அனைத்துலக தாத்தா பாட்டிகளுக்கு

பாதுகாவலர்களாக நியமித்து சிறப்பித்துள்ளது. இவர்களது வாழ்வு நமக்கு பாடமாகட்டும், இறைவனுக்கு ஏற்புடையவராக வாழ்வதற்கு வழிகாட்டட்டும் இதற்காக இத்திருப்பலியில் இணைந்து மன்றாடுவோம்

## விசுவாசிகளின் மன்றாட்டு

1. எல்லாம் வல்ல அன்பு இறைவா, நீர் எமக்கென்று ஏற்படுத்தித் தந்த திருச்சபையையும் அதன் பொருப்பாளர்களையும் உம்மிடம் அர்ப்பணிக்கின்றோம். சவால்களும், எதிர்ப்புகளும், எதிர்பார்ப்புகளும் நிறைந்த இக்காலத்தில் சிறப்பான விதத்தில் எம்மை வழிநடத்திட திருச்சபைத் தலைவர்களுக்கு வரமருள உம்மை மன்றாடுகிறோம்.
2. இரக்கம் மிகுந்த இறைவா, வாழ்வின் எந்த சூழலிலும் முனுமுனுக்காமல் அடுத்தவர்களிடமும் முறையிடாமல் அவமானப்படுத்தப்பட்ட சூழலிலும் உம்மையே விடாமல் பற்றிக்கொண்டிருந்த புனித சுவக்கின் புனித அன்னம்மாள் போன்று நாங்களும் எமது வாழ்வில் உம்மையே பற்றிக்கொண்டிருக்க வரமருள உம்மை மன்றாடுகிறோம்.
3. நலமருளும் நல்லவரே இறைவா, சிறந்த பெற்றோராகவும், சிறந்த தாத்தா பாட்டியாகவும் திகழ்ந்த இன்றைய புனிதர்களது வாழ்வு எமக்கு வழிகாட்டியாக அமைந்தது போல எங்கள் பிள்ளைகளுக்கு சிறந்த பெற்றோராகவும், சிறந்த தாத்தாவாகவும் பாட்டியாகவும் வாழ வரமருள உம்மை மன்றாடுகிறோம்.
4. அன்பின் ஊற்றே இறைவா, இறைச்சித்தம் எதுவானாலும் அதனை ஏற்று வாழ பழகியிருந்த புனித சுவக்கின் அன்னம்மாள் போன்று எமது வாழ்விலும் இறைச்சித்தம் புரிந்து அதனை ஏற்றுவாழ வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

## 28.07.2017 இந்தியப் புனிதை அல்போன்சா திருப்பலி

திருமதி. பத்மாவதி

### முன்னுரை

மத்தேயு நற்செய்தியில் கூறப்பட்டுள்ளபடி நல்ல நிலத்தில் விதைக்கப்பட்ட விதைக்கு ஒப்பானவர்தான் நமது இந்திய நாட்டின் புனிதையான அல்போன்சா அவர்கள். 1910 ஆகஸ்டு 19ம் தேதி ஜோசப் முட்டத்து மற்றும் மரியம்மி ஆகியோரின் அன்பு மகளாக பிறந்தார். பிறந்து சில வாரங்களிலேயே தாய் இறந்துவிட்டதால் பெரியம்மா அன்னம்மாவின் அன்பில் வளர்ந்தார். மேலும் பாட்டியும் தன் பங்கிற்கு பாசத்துடன் புனிதர்களின் வாழ்க்கையை கதைகளாக சொல்லி இறைபக்தியிலும் இறையச்சத்திலும் வளர்த்தார்கள்.

1917 நவம்பர் 27 அன்று முதல் நற்கருணை பெற்று, இயேசுவை உள்ளத்தில் குடிவைத்தார். 1925 ஜனவரி 21ல் உறுதிபூசுதல் பெற்ற பிறகு தமது இருதயத்தை முழுமையாக இறைவனுக்கு அர்ப்பணித்தார். ஒவ்வொரு சனிக்கிழமையும் அன்னை மரியாளிடம் சிறப்பாக மன்றாடி அவரையே தம் தாயாக ஏற்றுக்கொண்டார். தம் பெரியம்மாவிடம் "நான் உலக சிற்றின்ப வாழ்வை வேண்டாமென்று வெறுக்கின்றேன், என் தேவன் ஒருவரையே என் மணவாளனாக ஏற்றுக்கொள்ள இதயபூர்வமாக தீர்மானித்தேன்" எனக் கூறினார். 1930 மே 19ல் துறவற ஆடைப் பெற்றார். 1933 முதல் அதிகமாக நோய்வாய்ப்பட ஆரம்பித்தார். வாய், மூக்கு வழியாக இரத்தம் கசிந்தது. இறக்கும் நிலையில் துன்புற்றவர் அருளாளர் குரியாக்கோஸ், அல்போன்சாவைத் தொட்டு குணமளித்தார். பூரண குணம்பெற்ற அவர் மீண்டும் கொடிய காய்ச்சலால் 50 நாட்களாக துன்பப்பட்டார். எல்லோரும் தனியாக வைக்கும்படி தலைமையிடம் பரிந்துரைத்தார்கள். அல்போன்சா "நான் இயேசுவின் குழந்தை தெரேசாவிடம் நவநாள் இருக்கிறேன், இன்றிலிருந்து 9ம் நாளுக்குள் சரியாகாவிட்டால் அப்படியே செய்யுங்கள்" என்றார். மீண்டும் மீண்டும் பல நோய்களால் துன்பப்பட்ட அல்போன்சா 1945 ஜூலை 28 அன்று இறந்தார். 1986 பிப்ரவரி 8ம் நாள் அன்று திருத்தந்தை இரண்டாம் யோவான் பவுலால் அருளாளர் பட்டமும் 2008 அக்டோபர் 12 அன்று திருத்தந்தை 16ம் ஆசிர்வாதப்பர் அவர்களால் புனித நிலைக்கு உயர்த்தப்பட்டார். இயேசுவின் துன்பத்தில் தன் துன்பதை ஒப்பிடுவோர் இப்புனிதையைப் போல் நிலைவாழ்வை பெறுவார் என்னும் எண்ணத்தை மனதில் கொண்டு இத்திருப்பலியில் பங்கேற்போம்

**விசுவாசிகளின் மன்றாட்டு**

1. அன்புத் தந்தையே இறைவா, உமது திருச்சபையை வழிநடத்தும் எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், கன்னியர் அனைவரும் அன்பிலும் அமைதியிலும் ஒற்றுமையோடு தங்களின் அழைத்தலின் மேன்மையை உணர்ந்து மகிழ்வுடனும் ஆர்வத்துடனும் தியாக உள்ளத்துடனும் பணிபுரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
2. குணமளிக்கும் இறைவா, தீராதநோயினால் அவதியுறுவோர், அமைதியிழந்து தவிப்போர், வறுமையில் வாடுவோர் அனைவரையும் உமது அருளால் நிறைத்து உம்மீது நிலையான விசுவாசமும் நம்பிக்கையும் கொண்டு வாழ அருள்புரியும்படி இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
3. வாழ்வும் வழியுமான இறைவா, எம் பங்கு குடும்பங்களில் இறைப்பக்தியும் இறையச்சமும், பிறரன்பும், பிறரைப் புண்படுத்தாத வார்த்தைகளும் விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையும், மன்னிப்போம், மறப்போம் என்னும் நற்பண்புகளை ஏற்று வாழ அருள்புரியும்படி இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

## 30.07.2017 ஆண்டின் பொதுக்காலம் 17ம் ஞாயிறு திருப்பலி

கேட்டாத்தால்தான் மன்னிப்பு அடைய முடியும் என்ற எண்ணம் ஏற்பட உம்மை மன்றாடுகிறோம்.

திரு. ஜீசஸ் மகுட மன்னன்

I. 1அர 3:5,7-12 II. உரோ 8: 28-30 நற்செய்தி. மத் 13: 44-52

### முன்னுரை

இயேசு கிறிஸ்துவில் பிரியமுள்ள சகோதர சகோதரிகளே, நாம் இன்று ஆண்டின் பொதுக்காலத்தின் 17ம் ஞாயிறைக் கொண்டாடிக்கொண்டிருக்கிறோம். இன்றைய முதல் வாசகத்தில் சாலமோன் மன்னன் மக்களை கடவுளுக்கு ஏற்ற மக்களாக வழிநடத்த ஞானம் ஒன்றே போதும் என்றும் இறைவனிடம் ஞானத்தைக் கேட்கிறார். இரண்டாம் வாசகத்தில் தனக்கு ஏற்புடையதை இறைவன் முன்குறித்து தனது மாட்சிமையால் பங்குபொற அழைக்கிறார். நற்செய்தியில் இறையரசை பெற்றுக்கொள்ள தன்னிடம் உள்ளதை எல்லாம் இழக்க நேரிட்டாலும் அனைத்தையும் இழந்து இறையரசை பெற்றுக்கொள்ள வேண்டும் என்றும் தியானிப்போம். நாமும் இறையரசின் மக்களாக வாழ இறைவனிடம் ஞானத்தை மன்றாடி நம் குடும்பம் பங்கு நாடு அனைத்தையும் இறைவனுக்கு ஏற்புடையதாக்கவும், மாட்சியில் பங்கு பெறவும் தேவையான அருள்வேண்டி இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

### விசுவாசிகளின் மன்றாட்டு

1. ஞானத்தின் ஊற்றே எம் இறைவா, நம் தாயாம் கத்தோலிக்கத் திருச்சபையின் உண்மை வழியிலிருந்து விசுவாசத்திலிருந்து வழித்தவறிச் சென்ற நம் சகோதர சகோதரிகள், நற்செய்தியின் மூலமாக ஆண்டவரின் இரக்கமிகு நெருக்கத்தையும் கிறிஸ்தவ வாழ்வின் மேன்மையையும் அவர்கள் கண்டடையும் படிக்கான பேரருளைத் தந்து வழிநடத்தும்படி உம்மை மன்றாடுகிறோம்.
2. தம்மைத் தாமே தாழ்த்துவோர் உயர்த்தப்பெறுவர் என்ற தத்துவத்தை உணரவைத்த இறைவா, சாலமோன் கடவுள்முன் தம்மைத் தாழ்த்தியதால் கேட்ட ஞானமும் கிடைத்தது. கேளாத செல்வமும் புகழும், ஆயுளும் கிடைத்தது. அதுபோல எங்களை ஆளும் தலைவர்கள் உம்முன் முழுவதும் சரணடைந்து உம் சித்தப்படியே எங்களை வழிநடத்த வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
3. வாழ்வளிக்கும் வள்ளலே எம் இறைவா, மழையில்லாமல் வறண்டு

தந்து விளைநிலங்களை, நன்கு செழித்து பயன்தரவும், குடிநீர் பஞ்சம் தீர்ந்து தாராளமாக தண்ணீர் கிடைக்க உமது கனிவிரக்கத்தால் மழையினை அருளும்படி உம்மை மன்றாடுகிறோம்.

திரு. ஜான் சுரேஷ்

**முன்னுரை**

இறையேசுவில் பிரியமானவர்களே, இன்று நம் தாய் திருச்சபை தூய லொயோலா இஞ்ஞாசியார் விழாவினைக் கொண்டாடுவது. இஞ்ஞாசியார் 26வயது வரை பெர்டினாண்ட் இஸபெல்லாவினது அரசவையில் போர்வீரராகப் பணியாற்றினார். ஒருமுறை போரில் ஏற்பட்ட காயத்தின் விளைவாக தனிமைக்கு தள்ளப்பட்டார். தனிமையில் இருந்த இஞ்ஞாசியாருக்கு உதவியாக சில புத்தகங்களை நண்பர்கள் வாசிக்க கொடுத்தார்கள். புத்தகங்களை வாசிக்க தொடங்கிய இஞ்ஞாசியாருக்கு தனிமை தொலைந்தது. மனக்கலக்கம் தொடங்கியது. லுபோல்/ப் எழுதிய புத்தகம் மனதை தின்றது. தான் இனி கிறிஸ்துவின் போர் வீரராக வாழ்வேன் என்று உறுதி கொண்டார் அன்னை மரியா பாலன் இயேசுவுடன் இஞ்ஞாசியாருக்கு காட்சியளித்து அவருடைய உந்துதலை உறுதிப் படுத்தினார். எருசலேம் சென்று அன்னை மரியாவுக்கு வணக்கம் செலுத்தி, ஒப்புரவு அருளடையாளத்தில் பங்கு கொண்டு தம் போர்க்கருவிகளை பீடத்தில் வைத்து, தியானம் செய்தார். இவ்வாறு அவர் "ஆன்மீகப் பயிற்சிகள்" என்னும் நூலை தியானம் செய்யும் அனைவருக்காகவும் எழுதினார். பத்து பேருடன் சேர்ந்து 1534 ஆகஸ்ட் 15 அன்று புதிய துறவு அமைப்பை இஞ்ஞாசியார் உருவாக்கினார். இவ்வாறு இயேசு சபை உலகிற்குள் உதயமானது. இப்பேர்ப்பட்ட புனிதரின் நினைவு திருப்பலியில் கலந்துக்கொள்கின்ற நாம் ஆழ்ந்த விசுவாசமும் கடவுள் பக்தியும் வேண்டி இத்திருப்பலியில் செபிப்போம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

1. உம்மை எமக்காக கையளித்த இறைவா, எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், கன்னியர் மற்றும் பொதுநிலையினர் அனைவரும் நீர் பகர்ந்த சான்றிக்கேற்ப அர்ப்பண வாழ்வில் உறுதியோடு வாழத் தேவையான அருளைப்பொழிய வேண்டுமென்று தூய இஞ்ஞாசியார் வழியாக உம்மை மன்றாடுகிறோம்.
2. ஞானத்தின் ஊற்றே எம் இறைவா, மாணவ மாணவியருக்காக மன்றாடுகிறோம். அவர்கள் அறிவு வளம் பெற்று விளங்கவும், எதிர்கால வாழ்விற்கு தேவையானதை ஆய்ந்தறிந்து தேர்வு செய்யவேண்டிய அருளைப்பொழிய வேண்டுமென்று தூய இஞ்ஞாசியார் வழியாக

உம்மை மன்றாடுகிறோம்.

3. வாழ்வு தரும் உணவு நானே என்றுரைத்த இறைவா, விவசாய மக்களுக்காக மன்றாடுகிறோம். போதிய மழையையும் நல்ல விளைச்சலையும் விளைச்சலுக்கேற்ற ஊதியமும் கிடைக்கப்பெற உமதருளைப் பொழிய வேண்டுமென்று தூய இஞ்ஞாசியார் வழியாக உம்மை மன்றாடுகிறோம்.

4. நிலைவாழ்வை பொழியும் வள்ளலே எம் இறைவா, உம்மால் வாழ்வளிக்கப்பட்ட நாங்கள் அனைவரும் நீர் ஒருவரே எங்கள் தஞ்சம்

## பகுதி - 2: விசுவாசத்தில் வளர...

## தூய அல்போன்சா - இந்தியாவின் புனிதை

திரு. புல்லோன் ஜோ லூயிஸ்

கேரள மண்ணின் மாணிக்கமாய் கோட்டயம் அருகேயுள்ள குடமாலூர் கிராமத்தில் முட்டத்துப்பாடத்தில் என்ற குடும்பத்தில் ஜோசப் என்ற குட்டன் வைத்தியருக்கும், மாரியம் என்ற மேரி தம்பதியருக்கும் 1910 ஆகஸ்ட் திங்கள் 19ம் நாள் பிறந்தாள். பிறந்த எட்டாம் நாள் திருமுழுக்கின் வழியாய் "அன்னா" என்று பெயரிடப்பட்டடாள். தாலாட்டி வளர்க்க தாய்க்கும், அன்னையின் அன்பு என்ன என அறியும் வாய்ப்பு இவளுக்கும் இல்லாது போயிற்று. ஆம்... பிறந்த முப்பத்தேழாம் நாள் தன் அன்னையை இழந்தாள். முதலில் பெரியம்மாள்-அன்னம்மாள் முரிக்கானலிடமும், பின்பு பாட்டியிடமும், சித்தி ஏலிக்குட்டியிடமும் வளர்ந்தாள்.

சிற்றன்னையின் கண்டிப்பும், பாட்டியின் படிப்பினையும், பயிற்சியும் அவளுக்கு நிறைவாய் இருந்தன. பாட்டி அவளை தெய்வ பயத்திலும் இறைபக்தியிலும் வளர்த்ததோடு புனித குழந்தை தெரேசம்மாள், புனித பிலோமினாள் போன்ற புனிதைகள், புனிதர்கள் வாழ்க்கை வரலாற்றைப் படிப்பித்தாள். அவளுக்கு 1917ம் ஆண்டு நவம்பர்27ம் நாள் புதுநன்மையும், 1921ம் ஆண்டு ஜனவரி 21ல் உறுதிப்பூசுதலும் வழங்கப்பட்டன. அவள் தன் இதயத்தை முழுவதுமாக இறைவனுக்கே அர்ப்பணித்தாள். தவ முயற்சிகளோடு உடலால், உள்ளத்தால் வருத்தி அதன் மூலம் இறையன்பை தன்னில் வளர்த்துக்கொண்டாள். சிறு வயது முதலே ஏழை எளியவருக்கு உதவுவதில் மகிழ்ச்சியடைந்தாள்.

அறிவுத்திறனும், ஞாபக சக்தியும் கொண்ட இவள் இலக்கியத்தில் சிறந்து இருந்தாள். படிப்பு முடித்ததும் அவளின் பெரியம்மா அவளுக்கு திருமண திட்டம் வைத்திருந்தது அவளுக்குப் பிடிக்கவில்லை. அவளின்

மனம் முழுக்க இயேசுவின் அன்பும், அருளும், நமக்காக சிலுவையில் உயிர்விட்ட அழியா அவர் உருவவுமே ஆட்கொண்டிருந்தன. தான் அழகாய் இருப்பதே திருமணத்திற்கு காரணமென எண்ணியவளாய் தனது அழகைக் குறைத்து இறைவனுக்காய் வாழ்ந்திட உறுதிபூண்டாள். அனல் பறக்கும் நெருப்பினிலே தன் காலையிட்டு சுட்டுக்கொண்டாள். சில மாதங்களுக்குப் பிறகு குணம் பெற்ற அவளுக்கு அருட்சகோதரியாக வேண்டும் என்ற அவா கொழுந்துவிட்டு எரிந்தது. அதுசமயம் அங்கு வந்திருந்த கிளாரா மடத்துத் தாயார் ஊர்கலாவிற்கு அன்னக் குட்டியின் சாந்தம் தவழும் முகமும், அன்பொழுகும் பேச்சும் மிகவும் பிடித்துப்போனது. அதே சமயம் பங்கு குருவும் பரிந்துரைத்தப் படியால் அன்னக்குட்டியைக் கிளாரா மடத்தில் சேர்த்துக்கொள்ள முடிவு செய்து, அவள் தந்தையிடம் அவளை மடத்திற்கு அழைத்துவரச் சொன்னார். அதன்படி 1927 மே 21ம் நாள் கிளாரா மடத்தில் சேர்ந்தாள். 1928ஆகஸ்ட் 2ம் நாள் துறவற முக்காடு அணிந்தாள். அப்போது அன்னக்குட்டி என்ற அவள் பெயர் "அல்போன்சா" என்று மாற்றப்பட்டது.

அல்போன்சா மலையாள வித்வான் தேர்வில் தேர்ச்சிப்பெற்ற வேளை, அவளுக்கு மீண்டும் காய்ச்சல் வந்தது. அதன் பொருட்டு மடத்துத் தலைவி அவளை வீட்டிற்கு அனுப்பி வைத்தார். இதனைத் தனக்கு சாதகமாக்கி அவளின் பெரியம்மா, அவளின் திருமணத்திற்கான முயற்சியில் மீண்டும் தீவிரமாக ஈடுபட்டாள். ஆனால் அல்போன்சா அவளை மீண்டும் மடத்தில் சேர்த்துக்கொண்டார். 1930, மே 19ம் நாள் பரணங்கான ஆலயத்தில் திருவுடை தரிக்கும் பாங்குடன் அரிய வார்த்தைப் பாடாம் கீழ்ப்படிதல், தரித்திரம், கன்னிமை இம்மூன்றினையும் முழுமனத்தோடே ஏற்றுக்கொண்டாள். இரண்டாண்டு காலத்திற்குப்பிறகு வாக்காடு தொடக்கப்பள்ளியில் ஆசிரியையாகப் பணியாற்றினாள்.

1933 முதல் அதிகமாக நோய்வாய்பட ஆரம்பித்தாள். அருளாளர் குரியாகோஸ் சாவாரிடம் மன்றாடி குணம் பெற்றாள். 1936 ஆகஸ்ட் 12ம் நாள் நித்திய வார்த்தைப்பாடு கொடுத்தார். அந்தோ, கொடிய காய்ச்சலும் தொடர்ந்தது. நீண்ட நாட்கள் காய்ச்சல் இருந்ததால் அவளைத் தனிமைப்படுத்த முடிவெடுத்தனர். அல்போன்சாவோ, "இயேசுவின் குழந்தைத் தெரேசாவிடம் நவநாள் இருக்கிறேன் இன்றிலிருந்து ஒன்பது நாள்கள் அதிசயமாக குணம் பெற்றாள். 35ஆண்டுகள் வாழ்ந்த அல்போன்சாவின் கடைசி பத்து ஆண்டுகள் பல நோய்களின் சங்கமமாகின. நிமோனியா, எலும்புருக்கி நோய், டைபாய்டு, மலேரியா நோய்களின் வேதனைகளை இயேசுதாமே சிலுவையில் பட்ட கொடூரங்களையும், வேதனைகளையும் பொறுத்திப் பார்த்தவளாய் பொறுமையோடு ஏற்றுக்கொண்டாள்.

28.07.1946 இறுதி வேளை மரணத்தின் வாயிலில் அல்லோன்சா வேதனைகளின் இடையில் தன் சக சகோதரிகளிடம் தான் வேதனையைச் சகித்துக்கொள்ள வேண்டிய சக்தி கிடைக்க செபிக்கச் சொன்னாள். எனக்கு நல்ல உடுப்பை அணிவியுங்கள், என்னை இறைவன் அழைக்கிறார்,

## புனித இஞ்ஞாசியாரும் இயேசு சபையும்

திருத்தந்தை 16ம் பெனடிக்ட் புனிதர் பட்டமும் அளித்தனர். ஊரே அறியாமல் அடைப்பட்டு வாழ்ந்த புனித அல்போன்சாவை உலகே பிரமித்து வாழ்த்தி நின்றது.

திரு. லூயிஸ் சகாயராஜ்

கத்தோலிக்க திருச்சபையின் திருத்தூதுப் பணியில் சிறப்பாக இடம் பெற்றவர்களுள் ஒருவர் புனித இஞ்ஞாசியார். இன்றைய ஸ்பெயின் நாட்டில் உள்ள லொயோலா கோட்டையில் 29.10.1491ல் 13வது பிள்ளையாக பிறந்தவர் இக்னேஷியஸ் என்ற இனிகோ. இவர் பிறந்து சிறிது காலத்திலேயே இவரது தயார் இறந்துவிட மரிய தெ காரின் ஏனம் பெண்மணியால் வளர்க்கப்பட்டார். இனிகோ இளம் வயதிலேயே இராணுவத்தில் சேர்ந்து பணிபுரிய ஆர்வம் கொண்டிருந்தார். அதற்கான பயிற்சிகளை மேற்கொண்டார். 18வது வயதில் ஆயுதம் ஏந்தி போரில் ஈடுபட்டனர். 26வயது வரை அவர் போர் வீரராக, அரசி பெர்டினன்ட் இஸ பெல்லாவின் அரசவையில் சிறப்பாகப் பணிபுரிந்தார். 1521ல் பம்பசெனா கோட்டையை மீட்க பிரெஞ்சு படையினரோடு போரில் ஈடுபட்டிருந்தபோது அவரது காலில் ஏற்பட்ட காயத்தால் மிகவும் பாதிக்கப்பட்டார். நீண்ட நாள் சிகிச்சை பெற வேண்டியிருந்தது. இந்த மருத்துவ காலத்தில் தனிமையில் இருந்த இஞ்ஞாசியாருக்கு படிக்க சில புத்தகங்களை கொடுத்தார்கள்.

புனித பிரான்சிஸ் அசிசி, புனித சாமிநாதர் ஆகியோரின் வாழ்க்கை வரலாற்று நூல்களைப் படித்தார். ஆண்டவர் இயேசுவின் வாழ்க்கை வரலாறும், புனிதர்களின் தியாகம் நிறைந்த வாழ்க்கை முறைகளும் வாசிக்க வாசிக்க அவரது மனதை வருடின. குறிப்பாக கர்த்தூசியன் துறவி லூ டோல்ப் எழுதிய "கிறிஸ்துவின் வரலாறு" என்ற புத்தகம் இஞ்ஞாசியாரின் மதைத் தின்றது என்றே சொல்லலாம். உடல் காயத்துக்கு மருத்துவம் பலனளிக்கும் மனக்காயத்துக்கோ ஆண்டவரே ஆற்றுவிக்கும் அருமருந்து என்ற உண்மை அவரை ஆட்கொண்டது. இனி கிறிஸ்துவின் போர் வீரராக வாழ்ந்து சாட்சியம் பகர வேண்டுமென்ற உந்துதல் தோன்ற தன்னுடைய ஆடம்பர அகங்கார வாழ்க்கையைத் துறக்க முடிவெடுத்தார். அன்னை மரியா பாலன் இயேசுவோடு காட்சி தந்து இஞ்ஞாசியாரின் உந்துதலை உறுதிப்படுத்தினார்.

மொன்செராத் என்ற இடத்தில் உள்ள ஆலயத்தில் எருசலேம் செல்லும் வழியில் மரியன்னைக்கு வணக்கம் செலுத்தி ஒப்புரவு அருட்சாதனத்தில் பங்கெடுத்து மனதை பாரமின்றி இலகுவாக்கினார். போர் வீரருக்குரிய உடைகளை பீடத்தில் வைத்துவிட்டு இரவு முழுவதும் செபித்தார். பார்சிலோனா செல்லும் வழியில் மன்ரசோக் குகையில் தங்கி தியானம் செய்தார். அப்போது அவர் எழுதிய "ஆன்மீகப் பயிற்சிகள்"

என்ற நூல் இன்றளவும் மனப்பக்குவ தியானத்திற்குரிய வழிகாட்டி நூலாக அமைந்துள்ளது. தான் விரும்பியவாறே புண்ணிய பூமிக்கு பயணம் மேற்கொண்டார். தனது 32வது வயதில் இறையியல் பட்டம் பெற பாரீஸ் நகரில் படித்தார். அப்போது புனித பிரான்சிஸ் சவேரியார், புனித பீட்டர் பேபர் ஆகியோரை சந்தித்து நட்பு வட்டத்தை உருவாக்கினார். 1534ல் ஆகஸ்ட் 15அன்று லொயோலாவில் உள்ள மோன்ட்மார்ட்டர் புனித பேதுரு ஆலயத்தில் பிரான்சிஸ் சேவியர், அல்போன்சா சல்மேரன், டியாகோ லயனஸ் நிக்கோலாஸ் போபாடில்லா, பீட்டர் பேபர், சிமாயோ ரோடரிக்ஸ் ஆகிய ஆறுபேறுடன் இணைந்து துறவு பணிபுரிய முடிவெடுத்தார். 43வது வயதில் முதுகலைப் பட்டம் பெற்றார். 1539ல் இயேசு சபையை நிறுவினார். திருத்தந்தை மூன்றாம் பவுல் இயேசு சபைக்கு அங்கீகாரத்தை 1540ல் வழங்கினார். இஞ்ஞாசியாரின் பயிற்சிகள், அணுகுமுறைகள், தியான ஒழுங்குகள் ஆகியவை மிகவும் விமர்சனத்துக்குள்ளாயின. இதனால் பல்வேறு போராட்டங்களை சந்திக்க வேண்டியிருந்தது. ஆனால் அவரது தளராத வாதங்களால் போராட்டங்களை, எதிர்ப்புகளை வென்றார். இஞ்ஞாசியார் நிறுவிய இயேசு சபை திருத்தந்தையின் வலது கரமாக செயல்பட்டது மறைப்பரப்பு பணியில் தன்னிகரில்லா இடத்தைப் பிடித்தது இயேசு சபையில் பயிற்சி பெற்ற துறவிகள் போதிப்பதில் மட்டுமல்ல, சமூக மேம்பாட்டிலும் மாபெரும் புரட்சியை ஏற்படுத்தினர். இன்றளவும், புனித இஞ்ஞாசியாரின் நெறியில் இயேசுவின் இறையரசுக் கனவை நனவாக்கும் பணியில் மிகப் பெரிய புரட்சியை இயேசு சபை செய்து வருகின்றது.

1556, ஜூலை 31 அன்று இறந்த இஞ்ஞாசியாருக்கு திருத்தந்தை 5ம் பவுல் 1609ம் ஆண்டு ஜூலை 27 அன்று அருளாளராகவும் 1662, மார்ச் 12 அன்று திருத்தந்தை 15ம் கிரகோரி புனிதராகவும் பட்டம் வழங்கப்பட்டது. நற்கருணை, திருச்சிலுவை ஆகியவற்றின்மீது அசையா பற்றுக்கொண்டிருந்த புனித இஞ்ஞாசியாரை பின்பற்றும் இயேசு சபையாரும் அதை தொடர்கின்றனர். தனது போதனையாலும் முன்மாதிரியாலும் இயேசு சபையை சிறந்த ஆன்மீக அமைப்பாக மாற்றியதால்தான் புனித [illegible]

## குளுனி சபையின் வரலாறும் பணியும்

[illegible] அமைப்பாக திகழ்கிறது. அவர்களின் முயற்சிகள் வெற்றி பெறவும், பணிகள் சிறக்கவும், சமுத்துவப் பாதையில் சமூகம் சங்கமிக்கவும் நாமும் செபிப்போம். வாழ்த்துவோம்.

திருமதி. டிலைலா சேவியர்

### விடுதலையின் விண்மீன்

பிரான்ஸ் நாட்டில் பர்கண்டி சமவெளியில் ஜலாஞ்ஜ் என்ற சிற்றூரில் கி.பி. 1779ம் ஆண்டு நவம்பர் திங்கள் 10ம் நாள் ஜாவுஹே என்ற குடும்பத்தில் பல்தசார், குளோதின் தம்பதியர்க்கு நான்காவது செல்ல

மகளாக ஆன்மரி பிறந்தாள். திருமுழுக்கு அருட்சாதனம் தன் மகளை கடவுளின் பிள்ளையாக்கும் என்பதால் அந்த அருளைப்பெற பிறந்த அடுத்த நாளே அதாவது நவம்பர் திங்கள் 11ம் நாள் அன்று செர் என்ற ஊரின் பங்கு ஆலயத்தில் "ஆனி" என்ற பெயர் சூட்டி அருட்சாதனக் கொண்டாட்டம் நடந்தேறியது.

**நல்லாயனின் நாயகி**

கி.பி.1790ல் பிரஞ்சுப் புரட்சியினால் துறவு மடங்கள், மற்றும் தேவாலயங்கள் மூடப்பட்டன. சமய வழிபாடுகள் தடை செய்யப்பட்டு அருட்பணியாளர்கள் நாடு கடத்தப்பட்டனர். அனைத்தும் அரசுடைமையாக்கப்பட்டன. ஆயனில்லா ஆடுகளாக மக்கள் தவித்தனர். அங்கே அவர்களுக்கு விடியலாக எழுந்தது தான் ஆன்மரி என்ற விண்மீன்.

**இறைவனுக்கு அர்ப்பணம்**

இறைப்பணிக்காகத் தன்னையே முறைப்படி அர்ப்பணிக்க விரும்பிய ஆன்மரி 1798ம் ஆண்டு நவம்பர் 11ம் நாளை தேர்ந்தெடுத்தார். பிரான்ஸ் நாட்டிலிருந்த எல்லா மடங்களும் மூடப்பட்டிருந்த அந்த காலக்கட்டத்தில் தன் சகோதரன் ஸ்டீபன் வீட்டில் சிற்றாலயமாக மாற்றப்பட்டிருந்த ஒரு அறையில் தன் பெற்றோர், உடன்பிறப்புகள், மக்கள், உறவுகள் சூழ தன் வார்த்தைப்பாடுகளை இறைவனுக்கு அளித்தார். அப்பொழுது அவருக்கு வயது 19.

**இறைபராமரிப்பில் நம்பிக்கை**

"சூவான்ஸ்" என்ற இடத்தில் வேறு சில இளம் பெண்களுடன் சேர்ந்து குழந்தைகள் படிப்பதற்காக ஓர் உள்விடுதி துவக்கினார். இப்பொழுது தனது சிறிய களஞ்சியத்தில் எல்லா உணவு பொருட்களும் தீர்ந்த நிலையில் ஆன்மரி ஆலயத்தில் நுழைந்து அங்குள்ள நற்கருணைப் பேழையைத் தட்டி "தன்னையும் தன் பிள்ளைகளையும் கைவிட்டுவிட வேண்டாம். என்று உருகி இறைவனிடம் செபிக்க அந்தோ அவரது தந்தையும் சகோதரரும் ஓர் வண்டி நிறைய உணவு தானியங்களுடன் வந்து நிற்பதைக் கண்ணுற்ற அவளின் நெஞ்சம் நெகிழ ஆனந்த கண்ணீரில் விழிகள் நிறைய நன்றி கரம் கூப்பினர். நாம் கேட்பதற்கும் மேலாக கொடுப்பவர் நம் கனிவுள்ள கடவுளல்லவா?

**திருத்தந்தையின் ஆசீர்**

பேரரசர் நெப்போலியனுக்கு முடிசூட்ட பாரீஸ் நகருக்குச் சென்று கொண்டிருந்த திருத்தந்தை 7ம் பத்திநாதர் "ஷாலோன்" என்ற இடத்தில் தங்கினார். ஆன்மரி தன் சகோதரிகளோடு திருத்தந்தையை சந்தித்தார்கள். திருத்தந்தை அவர்களுக்கு ஆசீரளித்து "இறைவன் பல அரும்பெரும் செயல்களை உங்கள் வழியாக அவரது மகிமைக்காக செயல்படுத்த இருக்கிறார்" என்று கூறினார். கி.பி. 1806 டிசம்பர் 12ம் நாள் சட்டப்படி அரசு அனுமதி ஆணை பெற பேரரசர் நெப்போலியனை "போசன்" என்ற நகரில் சந்தித்து சபையின் கோட்பாடுகளில் ஆன்மரி

கையொப்பம் பெற்றார்.

### விடுதலையின் வீராங்கணை

மானாவுக்கு வந்த முதல் குழும நீக்ரோக்கள் ஒரு நல்ல கிறிஸ்துவ சமுதாயமாக பக்குவப்பட்டுள்ளதை கண்ட அன்றைய அரசாங்கம் அடிமைகளுக்கு மறுவாழ்வு அளிக்கும் பொறுப்பினை அன்னையிடம் ஒப்படைத்தது. அதன்படி 185 அடிமைகளுக்குகாயென் ஆளுநர் தலைமையில் அன்னை ஆன்மரி அவர்களின் ஏற்பாடுகளின் பேரில் பீரங்கிகள் முழுங்க ஆலய மணிகள் ஆர்ப்பரிக்க, ஆடம்பரத் திருப்பலியுடன் ஒவ்வொரு அடிமைக்கும் விடுதலைப் பத்திரம் வழங்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து அன்னை ஆன்மரி அவர்கள் அநேக அடிமைகள் விடுதலைபெற்றதன் வாழ்வின் பெரும்பகுதியை அர்ப்பணித்தார். எனவேதான் அன்றைய அரசு அன்னை அவர்களை விடுதலையின் வீராங்கணை என கவுரவித்தது.

### படைத்தவரில் சங்கமம்

ஜூன் 17 அன்று ரீயூனியன் செல்ல வந்த சகோதரிகளை அன்னை ஆசீர்வதித்து உற்சாகப்படுத்தி "என் அன்பு குழந்தைகளே, உங்களிடமிருந்து விடை பெறுகிறேன், இங்கு இனி நாம் சந்திக்கப் போவதில்லை ஆனால் ஒருநாள் விண்ணகத்தில் சந்திப்போம்" என்றார். இத்தகைய பாசத்தை பொழிந்த அன்னை 1851ம் ஆண்டு ஜூலைத் திங்கள் 15ம் நாள் தனது 72 வயதில் இறைவனடி சேர்ந்தார். அன்று அவர் ஏற்றிய ஒளி அணையா விளக்காக அவர் வழிச்செல்லும் எம் சகோதரிகள் வழியாக [illegible] என்று அழைத்தவரின் குரலிற்கு செவிமடுத்து படைத்தவனில் பங்கேற்க விரைந்திட்டார். அனைவராலும் புனிதை என்று போற்றப்பட்ட அன்னை ஆன்மரி ஜாவுஹே. வாழ்க அன்னை ஆன்மரி, வளர்க அவரது பணி

## திருச்சபை செய்திகள்

சகோ. சுரேஷ் இயேசுபாலன் சச.,

1. 2019ம் ஆண்டு அக்டோபர் மாதத்தை சிறப்பு மறைப்பணி மாதமாகச் சிறப்பிக்குமாறு உலகளாவியத் திருஅவையைத்தான் விண்ணப்பிக்க இருப்பதாக திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், பாப்பிறை மறைப்பணி கழகத்தினரிடம் கூறினார்.
2. "கலப்படமற்ற சீரான தினசரி வாழ்வை மேற்கொள்ளும் ஒவ்வொரு நாள் புனிதர்கள் திருஅவைக்குத் தேவை" என்ற சொற்களை திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் தன் டுவிட்டர் செய்தியாக வெளியிட்டார்.
3. ஆயரை ஏற்க மறுப்பது திருஅவையை அழிவுக்குள்ளாக்கும். திருத்தந்தை பெனடிக்ட் அவர்களால் நியமிக்கப்பட்ட ஆயர் முழீயுடுநுமுயு அவர்களை ஏற்க மறுத்துவரும் அஹியாரா

மறைமாவட்ட மக்கள், திருஅவையை அழிவுக்குள்ளாக்கும் செயலை செய்கின்றனர் என்ற கடுமையான வார்த்தைகளைப் பயன்படுத்திய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், இத்தகைய நிலைகள் குறித்து திருத்தந்தை ஒருவர் மௌனம் காக்க முடியாது என தெரிவித்துள்ளார். திருத்தந்தைக்கு ஒவ்வோர் அருள்பணியாளரும் தங்கள் கீழ்ப்படிதலை தெரிவிக்க வேண்டும் என்பது மட்டுமல்ல, திருத்தந்தையால் நியமிக்கப்படும் ஆயரை ஏற்கவேண்டும் எனவும் வலியுறுத்தினார் திருத்தந்தை பிரான்சிஸ்.

4. உலகில் 5 வதுக்கும் 14க்கும் இடைப்பட்டச் சிறார்களில் ஏறத்தாழ 15கோடி பேர் குழந்தைத் தொழிலாளர்களாக இருப்பதாக குழந்தைகளுக்கான அவசரகால நிதி அமைப்பான யுனிசெப் அறிவித்துள்ளது. சஹாராவை அடுத்த ஆப்ரிக்க நாடுகளிலேயே குழந்தைத் தொழிலாளர் எண்ணிக்கை மிகப் பெரியளவில் இருப்பதாகக் கூறும் இவ்வமைப்பு, உலகின் மொத்த குழந்தைத் தொழிலாளர்களுள் 28 விழுக்காட்டினர், இந்நாடுகளிலேயே இருப்பதாகவும், சிறார்களுள், பெண் குழந்தைகள் அதிகளவில் வீட்டு வேலைகளில் ஈடுபடுத்தப்படுவதால் அவர்களின் கல்வி பெருமளவில் பாதிக்கப் படுவதாகவும் இவ்வறிக்கை மேலும் கூறியுள்ளது.

5. இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் மூன்றாண்டு ஆட்சியில், குடிமக்களின் மனித உரிமைகளிலும், சமூக உரிமைகளிலும் எவ்வித முன்னேற்றமும் காணப்படவில்லை என குற்றஞ்சாட்டியுள்ளன. இந்திய நாட்டின் சமூக அமைப்புகள், தலித் மக்கள் பாகுபாட்டுடன் நடத்தப்படுவதும், அவர்கள்மீது நிகழ்த்தப்படும் உரிமை மீறல்களும் தொடர்வதாக உரைக்கும் "அம்னெஸ்டி இன்டர்நேஷனல்" அமைப்பின் இந்திய கிளைத்தலைவர் யுயமயச ீயவநட அவர்கள் அனைவரின் முன்னேற்றத்திற்கும் உறுதி வழங்கியுள்ள மோடி அரசின் வாக்குறுதிகள், தோல்வியைச் சந்தித்துள்ளன என்று கூறினார். தலித் மக்கள் இந்தியாவில் பாகுபாட்டுடன் நடத்தப்படுவதாகவும் சிறுபான்மையினர் [illegible] இடம் [illegible] இந்திய சமூக அமைப்புகள் குற்றஞ்சாட்டியுள்ளன.

**தீபகச் சுடர்**

அன்பு வாசகர்களே!

[illegible] ஆண்டு சந்தா [illegible] 100 செலுத்தி [illegible]

உங்கள் [illegible]

**தீபகம்**
தொன்போஸ்கோ மறைப்பணி மையம்
45, லேண்டன்ஸ் சாலை
கீழ்ப்பாக்கம், சென்னை-600 010.
தொலைப்பேசி: 044-26428162.

பெயர்:...................................
முகவரி:.................................
.........................................
.........................................
.........................................

தொலைப்பேசி: .................

## சுடர் வாசகர் போட்டி - 36

1.

1. பெர்டினாண்டு இஸபெல்லாஅரசவையில் போர் வீரராக பணி புரிந்த புனிதர் யார்?
2. தூய அல்போன்சாவின் இயற்பெயர் என்ன?
3. ஆன்மரி ஜாவுஹே தனது 19வது வயதில் எந்த இடத்தில் வார்த்தைப்பாட்டை அளித்தார்?
4. துன்பங்களை இருவழிகளில் சந்திக்காலம் என்று ஆசிரியர் இருவழி என்று எதைக்குறிப்பிடுகிறார்?
5. தூய ஸ்கொலாஸ்திக்காவின் சகோதரர் யார்?
6. "கபடற்ற சீரான தினசரி வாழ்வை மேற்கொள்ளும் ஒவ்வொரு நாள் புனிதர்கள் திருஅவைக்கு தேவை" கூறியது யார்?
7. இறைவன் தனக்கு ஏற்புடையவரை எதில் பங்குபெற அழைக்கிறார்?
8. ஆன்மீக பயிற்சிகள் என்னும் நூலை எழுதியது யார்?
9. 8.2.1986ல் திருத்தந்தை 16ஆம் பெனடிக்ட் யாருக்கு புனிதர் பட்டம் அளித்தார்?
10. தூய மரிய கொரற்றியின் பெற்றோர் பெயர் என்ன?
11. "ஒரு புனிதர் மற்றொரு புனிதரின் வரலாற்றை எழுதிக் கொண்டிருக்கிறார்" கூறியது யார்?
12. 2019 ஆம் ஆண்டுஅக்டோபர் மாதத்தை எந்த மையக்கருத்தில் சிறப்பிக்க திருத்தந்தை திட்டமிட்டுள்ளார்?
13. தூய மரிய கொரற்றி எந்த வயதில் முதல் நற்கருணை பெற்றார்?
14. தூய 12ஆம் பத்திநாதர் யாருக்கு ஐரோப்பாவின் தந்தை என்ற பெயரைப் பட்டமாக சூட்டினார்?

## அடுத்த சுடரில்

### பகுதி 1 வழிபாட்டு வழிக்காட்டி

ஜான்மரி வியானி
ஆண்டவரின் உருமாற்றம் மாற்றம் விழா
தூய லாரன்ஸ் திருத்தொண்டர்
தூய கிளாரா கன்னியர்
புனித வனத்து சின்னப்பர்
மாக்சிமிலியன் மரிய கோல்பே
தூய கன்னிமரியாவின் விண்ணேற்பு
அரசியான தூய கன்னிமரியா
தூய பர்த்தலமேயு
தூய அகுஸ்தீன்
திருமுழுக்கு யோவானின் பாடுகள்
பொதுக்கால ஞாயிறுகள்

### பகுதி 2: விசுவாசத்தில் வளர...

ஆண்டவரின் உருமாற்றமும் நமது உருமாற்றமும்
மரியாளின் [illegible]
மாக்சிமி[illegible]
தி[illegible]

**அன்பு நிறை வாசகர்களே!**

இந்த மாத "சுடர் வாசகர் போட்டி" பதில்களை ஜூலை 20ஆம் தேதிக்குள் அனுப்பி வைக்கவும். சரியான பதில்களை எழுதி குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்படும் மூன்று பங்கேற்பாளர்களுக்கு சிறப்பு பரிசுகள் வழங்கப்படும்.
(சரியான முகவரியை குறிப்பிடவும்)

## சுடர் வாசகர் போட்டி - 36 சரியான விடைகள்

1. எபேசுபொதுச்சங்கம் கி.பி.431
2. தூய பேதுரு
3. திருப்பாடல்கள் 32:8
4. லிஸ்பான் 1195ல்
5. தூய சின்ன தெரசம்மாள்
6. தூய போனிபாஸ்
7. பதுவைநகர் தூய அந்தோணியார்
8. தூய சிரில்
9. கமாலியேல்
10. செபம்
11. தூய ஆவியின் பெருவிழாவை அடுத்த 2ஆம் வாரத்தில்
12. மே 24 காலை 8.30 மணிக்கு
13. தூய நார்பெர்ட்
14. இயேசு
15. திருத்தந்தை பிரான்சிஸ்

**அன்பார்ந்த ஆசிரியப் பெருமக்களுக்கு**

தீபகம் மறைப்பணி மையத்தின் வாழ்த்துக்கள்.

## ஜூலை மாதத்திற்கான திருப்பலி வாசகங்கள்